# “சும்மா இரு”!!!

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா





# “சும்மா இரு”!!!



உ

பிள்ளையார் சுழி பக்கத்தில் வரும்,
வாசகங்கள், கீழே உள்ளவைகளுக்கு,
சம்பந்தம் கொண்டும் வரலாம்!
சம்பந்தம் இல்லாமலும் தனியே வரலாம்.
ஆனால் அவை, வெகு வெகு முக்கியம்!
மேலும், அவைகளில், தொடரும்
என வந்தால், அதே இடத்தில், அந்த
பக்கத்தை பார்க்கவும். முடிந்தது
என வந்தால், அது ஆரம்பித்ததை, என
பொருள் கொள்க!

பாபா.

**பொருளடக்கம்**


௧. முத்தொழில்----------------------------------------------௨

௨. கேள்வி & பதில்----------------------------------------௧௮

௩. சிவரகஸ்யம்------------------------------------------66


எல்லாம் நீ!



(ஸத்திய வாக்கு) ①

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்!"

"ஸத்குரு திருவடி தன்னை!"

"நம்பினோர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்யாணாம்!"

"யத் பாவம் தத் பவதி!"

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம்,"

ஓம்!!!

"அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம்,"

"அகமே ஸ்வரூபம்!"

"ஜகம், பரமும், ஜீவர்களும்,"

"சிறிதும் இல்லை!"



காலாதீத பரம் (2)

ஸத்தியம் என உணர்வது ஹயன் ஆகும். அதை அறிவால் உணர்ந்து புத்தி அழிந்து நாமே அறிவாய் இருப்பது ஹரி ஆகும். அறிவால் உணர்ந்து அறிவாகவே இருப்பதற்கு உறுதுணையாயிருக்கும் தர்மமே ஹரன் ஆகும். ஆகவே ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய மூவரும் ரூபமற்ற நாமம் மட்டும் பொருந்தியவர்களே!


# முத்தொழில்!!!

# ஹயன்! ஹரி! ஹரன்!

ஆகிய இம்மூவரும், நாமாவோடு சம்பந்தம், கொண்டவர்களேயன்றி, ரூப சம்பந்தம், கொண்டவர்கள் அன்று. எப்படி என்றால்?

(A) ஹயன்! என்றால், இருப்புத்தன்மையை குறிப்பதாகும். அதாவது ஒன்று உண்டு என்ற, பரசொரூப ஸ்திதியை, குறிப்பதாகும். அதாவது, காலாதீத பரமே, ஸத்தியம் என முழங்குவதாகும். ஆகவே இதை, ஸத் எனக் கொள்ளலாம்.

(B) ஹரி! என்றால், அறிவு எனப் பொருள்படும். ஓர் நிலையில், அறிவு என்றால், ஆத்மா எனவும், பொருள்படும். ஓர் நிலையில், ஆத்மாவை




உள்ளபடி அறியும், அறிவுத் திறன் எனவும்
பொருள்படும். பொதுவாகவே, ஹரி என்பது
அறிவு (ஆத்மா) என உணர்ந்தால் போதும்.
ஹரன் என்றால், தர்மம் எனப் பொருள்படும்.
அத்தர்மம் என்பது, புண்ணியம் என்பதல்ல.
புண்ணிய பாபம் / இரண்டும் ஒன்றே / இவ்விர
ண்டும், லௌகிக தர்மத்தை குறிக்கும். இந்த
தர்மமானது, ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை
பெறும். என்ற கருத்தை கொண்டதாகும்.
இங்கு, அறிவு பிரகாசிக்க வேண்டும் என்றால்,
ஸத்தியம் பேசி. அதனால் தர்மம் நிலை பெற்று,
அத்தர்மத்தால், அறிவு (ஆத்மா) பிரகாசிக்கும்
என, பொருள் கொள்ளல் வேண்டும். ஸத்தியம்
பேசி, தர்மம் நிலை பெறுமல், அறிவு (ஆத்மா) பிர
காசிக்காது. என்பதே முடிந்த முடிவாகும்.



அம்மூவர் என்றால்
ஹயன்! ஹரி! ஹரன்!
ஆகிய மூவர் ஆகும்.
இம்மூவர் என்றால்
பிரம்மன்! நாராயணன்!
சிவபெருமான்! ஆகிய
மூவராகும்.

புண்ணிய பாவம் இரண்டும், பிறவியின் வித்தாகும்.
ஸத்திய தர்மம் இரண்டும், முக்தியின் வித்தாகும்.
ஸத்தியம் வாக்காகும். தர்மம் செயல் ஆகும்.
ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய இம்மூவரும்,
தொழில் கர்த்தாவாக இல்லை. என்பதே ஸத்தியம்.
பின்னர், தொழில் கர்த்தா, எவர் என்றால்?
பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்! ஆகிய
மூவர் ஆகும். இம்மூவரும், சூட்சம நாம ரூபங்கள் ஆகும்.
அம்மூவரும் அரூபிகள். நாமம் மட்டும் உண்டு.
ரூபம் இல்லை யென்பதே ஸத்தியம்.
அம்மூவரும், பரம் என்ற நிலையில், யோக மாயாவின்
இணைப்பும், பிணைப்பும் இல்லாத, உபயோகமற்ற,
தனியே உபயோகிக்க முடியாத மண் போன்றதாகும்.
ஆனால், இம்மூவரும், தெய்வம் என்ற நிலையில்,

# முத் தொழில்



ஹயன்! ஹரி! (5) ஹரன்! ஆகிய மூவரும் நாமா மட்டுமே வேறு ரூபங்கள் அவர்கள் தொழில் கர்த்தா இல்லை! பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான் ஆகிய மூவரும் இட்சம நாம ரூபிகள் ஆகும்! ஆகவே இவர்கள் மூவருமே தொழில் கர்த்தாக்கள் ஆகும்!

யோகமாயாவின், இணைப்பும் பிணைப்பும் கொண்ட களிமண், போன்றவர்களாக இருந்தாலும், மாயா சூட்சும ஸ்வரூபிகள் ஆகும். இவர்கள் மூவருமே, முத்தொழிலுக்கும், உவந்தவர்கள் என்று, புராணக் கதைகள் மூலமாக, பேசப்படுகிறது. ஆனால் உண்மையல்ல.

இம் மூவரின், நடுவே, யோகமாயா எனச் சொல்லலாம்.

இம் மூவரின், நிழல்களான யோகமாயாவே, மூன்று வடிவங்கள் ஆயின. அம் மூன்று வடிவங்களே, முறையே கலைமகள்! அலைமகள்! மலைமகள்! ஆகும்.

இம்மாயா சக்தி மூன்றுமே, முத்தொழிலையும் செய்கின்றன. ஆனால் படைக்கும் தொழில், பிரம்ம தேவனும்! காக்கும் தொழில், நாராயணனும்! அழிக்கும் தொழில் அல்ல, பழைய ஜைவைப் புதியன வாக்கும் நிமித்தம், மாற்றம் மறைவை, சிவபெருமானும்! தொழில்





காலாதீத பர சொரூபத்தையே ஓர் வாக்கிய விளக்கத்திற்காக சதாசிவம் எனச் சொல்லலாம். உபமான மண் என்ற பரசொரூபமே சதாசிவம் எனக் கொள்ளலாம். இது உண்மையல்ல. உண்மையின் மெய்க்கு பொய்யான விளக்கம்.

செய்வதாக பேசப்படுகிறது. ஆனால் இவர்கள் செய்வதில்லை. காரணம், இம் மூவரும், சிவ (சும்மா சுகமாக இருக்கும்) நிலையிலுள்ள, யோகானுஷ்டான பரர்களாகும். புராண இதிகாச கதைகள், மூலமாகத்தான், இம் மூவரும் விளங்கவும், துலங்கவும், செய்கிறார்களேயன்றி உண்மையில் இல்லவே இல்லை.

இந்த தெய்வ ஸ்வரூபங்களை, பிரித்து, அறிவு பூர்வமாக, உணர்வது என்றால்?

**① சதாசிவம்** :— காலம், தேசம், வர்த்தமானம், நாமம், ரூபம், குணம், குறி, மணம் வாக்கு, காயம், ஆகிய, இந்த பத்திற்கும், எட்டாத நிலையில், (வாக்கோ, வரியோ, விளக்க முடியாத நிலையில்,) காலாதீத பரம் எனச் சொல்லும், ஒன்றின் இருப்பு ஸ்தானம் ஆகும். இது செயலற்ற ஒன்றாகும்.

(7)



ஹயன் அம்ச
பிரம்மனும்;
ஹரி அம்ச
நாராயணனும்;
ஹரன் அம்ச
சிவபெருமானும்;

# உ ஜகத்தின்

அதிபதியாகும்.

மஹத்தின் அதிபதி மகேசன் ஆகும்.
(கோள்கள் அண்டங்கள் மஹத்து! அதில் நாம இருப்பது ஜகத்து ஆகும்

## உ மகேசன்:— காலாதீதபரமும்


அதாவது மகேசன்

சதாசிவத்தின், மறு வடிவமாகும். அச் சதாசிவத்தின், நிழலே யோகமாயா வாகும். இங்குதான், இயக்கத்தின், ஆதாரம் தோன்றுகிறது. அதாவது, யோகமாயாவும்; மகேசனும்; இணைவதையே, ஜலமும், மண்ணும், இணைந்து, பிணைவதாவேயே, களிமண் என்ற, பசையுள்ள ஒன்றிலிருந்து, மஹத்து என்ற, கோடானு கோடி கோள்கள் உண்டாயின! இம் மஹத்தின், அதிபதியே, மகேசன் ஆகும்!

## உ ஹயன்:— இவன் அம்சமே, பிரம்மன் ஆகும்

ஹயனாகிய

ஹயன் தியானயோகானு நிஷ்டாபரம் ஆகும். இவன் கர்த்தா இல்லை. இவன் அம்ச, பிரம்மதேவனே மஹத்தை, ஜகத்தாக மாற்றிய, சிருஷ்டி கர்த்தா ஆகும். இங்கும்,



அச்சிருஷ்டியை, இவன் செய்யவில்லை. இப்
பிரம்மனின், நிழலாகிய லோகமாயாவே,
(கலைமகளே) அக்காரியம் செய்கிறாள்.

**4 ஹரி:—** இவன் அம்சமே நாராயணன் ஆகும்.
ஹரி தியான யோக நிஷ்டானுபரம் ஆகும். இவனும்,
கர்த்தா இல்லை. இவன் அம்ச நாராயணனே,
ஜகத்தை ரக்ஷிக்கும், கர்த்தா என பேர் பெறுகிறான்.
இந்த ரக்ஷிப்பினை, இவனும் செய்யவில்லை. இந்த
நாராயணனின், நிழலாகிய லோகமாயாவே,
(அலைமகளே) அக்காரியம் செய்கிறாள்.

**5 ஹரன்:—** இவன் அம்சமே சிவபெருமான்
ஆகும். ஹரன் தியான யோகா நிஷ்டானுபரம் ஆகும்.
இவனும் கர்த்தா இல்லை. இவன் அம்ச சிவபெருமானே
ஜகத்தை, மாற்றி மறைக்கும் கர்த்தா என, பேர் பெறுகிறான்.
இத்தொழிலை, இவனும் செய்யவில்லை. இந்த


## முத்தொழில்




பிரம்மன்! நாராயணன்! (9)
சிவ பெருமான்! ஆகிய
மூவருமே தியான
யோக நிஷ்டானுபவர்
களாகும். இவர்களின்
நிழல்களாகிய யோக
மாயாவே முத்தொழிலு
யும் அநுபவமாக செய்கிறது.
ஆனால் சிறி மூர்த்திகளையே புராணம் சுட்டிகாட்டுகிறது

சிவ பெருமானின், நிழலாகிய யோகமாயாவே,
மலைமகளே அக்காரியம் செய்கிறாள்.
இது வரை ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய
இவர்கள், அம்சமான, பிரம்மன்/ நாராயணன்!
சிவ பெருமான்! ஆகிய இம்மூவருமே, கர்த்ருத்
வத்தை, ஏற்றுக் கொண்டாலும், இம்மூவரின்,
நிழல்களாகிய, முப்பெரும்சக்திகளே,
யோகமாயாவே செய்கிறார்கள் என்றும், ஆனால்,
அக்கர்த்தாக்கள் மூவருமே, அதை ஏற்றுக்
கொள்கிறார்கள், என்றும் சொன்னேன்.
இதை, வரிசைக்கிரமமாக பார்த்தாலும், சதாசிவம்!
மகேசன்! பிரம்மன்! (ஹயன்) நாராயணன்! (ஹரி) சிவபெருமான்! (ஹரன்)
செயலற்ற, சுத்த பிரம்ம வஸ்துவேயாகும்!
என உணரவேண்டும்.

(10)



யோகமாயாவோ, போகமாயாவோ, இவர்கள்
இருவரும், நிழல் அம்சமாக இருந்தாலும், ஓர்
பசை உள்ளவர்கள் ஆகும். அதாவது இணைப்பும்!
பிணைப்பும்! கொண்டவர்கள் ஆகும். இதை ஓர் நிலையில்
சொல்வது என்றால்?
செயலற்ற பிரம்ம வஸ்து என சொல்வதை!
எலும்பு! என கொள்ளலாம்!
யோகமாயாவும்! போகமாயாவும்! இவைகளை,
மாம்சம்! கொழுப்பு! ரத்தம்! நரம்பு!
என்ற பசையும்! அசைவும்! அசைக்கவும்!
உள்ளதாக கொள்ளலாம். இது செயலுற்றதாகும்.
எலும்பு இல்லாமல், மேலே கூறிய பசை உள்ளன,
நிலை பெற முடியாது. என்பதும் ஸத்தியம்.
பசை உள்ளன இல்லாமல், எலும்பு தனியே இயங்க முடியாது
என்பதும் ஸத்தியம்.





அதே போல், பரம் என்ற பிரம்மம் (எலும்பு)
இல்லாமல், அதன் நிழலாகிய மாயா,

(சதைப்பற்று),


பசை என்ற நாமரூப ஜகஜீவ தோற்றங்கள் நிலைபெறவும்,
இயங்கவும் முடியாது என்பதே சத்தியம்.
ஆனால், முன் கூறிய பசை என்ற நாமரூப ஜகஜீவ
தோற்றங்கள் இல்லாமல், பரமாகிய பிரம்மம் உண்டு.

ஆனால் அப்பிரம்மம் (எலும்பு) இயக்கம் அற்ற தன்மை
யினால், அது இருந்தும், பிரயோஜனம் இல்லை.
ஆகவே, அதை (பரமாகிய பிரம்மத்தை) இல்லையெனச்
சொல்லவும் வாய்ப்பு உண்டு. அப்பரமாகிய பிரம்மம்

முக்காலமும், எக்காலமும் உண்டு. ஆனால் அதை
உண்டு எனச் சொல்லும் வாக்கும், வாயும், இல்லை.

இல்லையெனச் சொல்பவரும், உண்டு என சொல்பவரும்,
அதை தள்ளுவாரும், அதைக் கொள்வாரும், அதற்கு
அன்னியமாய், எவரும் இருக்க முடியாது, இருக்க இயலாது.

(12)




பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்!

ஆகிய மூவரும், முறையே இருப்புத்தன்மையில் மண்ணாகவும்;

" " இயக்கத்தன்மையில் ஜலமாகவும்;


" " கர்மாவின் நிலையில் அக்கினியாகவும்;

இருக்கிறார்கள் என, உணர வேண்டும்! இதை அந்த கரணங்கள் நிலையில், சொல்வது என்றால்? முன் இருவரும், மனம்! புத்தி! சித்தம்! என்றும்; பின் ஒருவர், கர்மா நிலையின் நான்! என்னுடையது! என்ற, அஹங்கார, மமகாரமாக! நிலையில் இருக்கிறார் என்றும், பொருள் கொள்ளல் வேண்டும். சதா சிவத்துக்கும்! மஹேசனுக்கும்! ரூபம் இல்லை! ஆனால் அது, அதுவாகவே, இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டும் நிமித்தமாக. ஒலிவடிவமாக (நாமமாத்திரம் உள்ளதாக) இருக்கிறார்கள்.



தொட்டு உணர்த்தும் நிலையில், இல்லாததான,
காலாதீத பரம் என்ற, பிரம்மம் உண்டு என்பது (ரூபம்)
சொல் விளக்கமே! பொருள் விளக்கம் இல்லை!
ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய இம் மூவரும்,
நாம (ஒலி) சம்பந்தமேயன்றி, சூட்சும ரூபம்
கூட, இல்லாதவர்களாகும். ஆகவே இம் மூவரும்,
வாக்கிய விளக்கமேயாகும். அடுத்து,
பிரம்மனும்! நாராயணனும்! சிவபெருமானும்!
சூட்சும நாம ரூபம் உடையவர்களாகும்.
இவர்களும் கற்பனை புராண (பொய்க்)
கதை சம்பந்தப் பட்டவர்களேயன்றி, உண்
மையில் இல்லவே இல்லை. ஆகவே இதில் கூறிய
ஐவரும், கதா ரூபத்தில் வந்தவர்களே தவிர
உண்மையில் இவர்கள் அனைவரும், இயக்கம்
அற்ற தன்மையாலும் வாக்கினவேயே,

14



இருப்புடையவர்களாக, இருப்பதனையும்;
மாயாவோ! நிழல் வடிவமாக இருப்பதனையும்;
இம்மாயாவுக்கு, இக்கலியுகத்தில் மட்டும்,
பலபல கதைகளைச், சொல்லிச் சொல்லியே!
சொல்லிச் சொல்லியே! சொல்லிச் சொல்லியே!
இருப்பு கொடுக்கும் தன்மையாலும்;
வாக்கை மனதில் ஒடுக்கி! அம்மனதை
அறிவில் ஒடுக்கி! அவ்வறிவை பேரறி
வில் மயமாக்கி விட்டால் ?????????,,

## "சொல் அற்றுப் போகும்!

பேசிப் பேசியே, விளக்கம் கொடுத்தும், விளக்கம்
வாங்கியும்; மேலே கூறியவர்களுக்கு, இருப்பு
கொடுக்காமல், அவர்களே நாம்! நாமே அவர்கள்!
என சொல்லுற அம்மா இருக்கால்! இருப்பதும் ஒன்றாகும்.
நடப்பதும் நவமாகும்.




ஜகத் ஜீவ ஈஸ் (15)
வராதிகளாக,
வாக்கை குறைக்க
வேண்டும் என்றால்?
நாம ரூபம் அனைத்தும்
அவனே என்றும்.
அவன் இயக்கமே
என்றும். வாக்கை மாற்றுவதால், மனம்
அறிவில் ஒடுங்கும் என்பது ஸத்யமாகும்.


சொல் அற சும்மா இரு!!!

சொல் என்ற வாக்கே, ஜகத் ஜீவ, ஈஸ்வராதி களாக

வாக்கை குறைக்க வேண்டும். பின் நிறுத்த வேண்டும்.
வாக்கை குறைக்க வேண்டும் என்றால்,
வாக்கை மனதில் ஒடுக்க வேண்டும்.
வாக்கை மனதில் ஒடுக்க வேண்டும் என்றால்,
மனதில் தோன்றும் எண்ணங்களை, எழாமல் பண்ண
வேண்டும். எண்ணம் எழாமல் பண்ண வேண்டும்
என்றால், மனதின் அதிபதி மாயா! மாயாவின்
அதிபதி ஸ்ரீபகவான்! எல்லாம் நீயே! எல்லாம்
உன்னால்! எல்லாம் உனதே! என்பது, அனுபவ
நிலையில், ஸத்யமாகி! அதுவே சாத்தியமாகி!
அதுவே ஸாஸ்வதமானால்! இயல்பானால்!
நீயே, ஸ்ரீபகவான் ஆகிவிட்டாய் இது ஸத்யம்!
இங்கு சாட்சி நிலையே, ஸ்ரீபகவான் ஆகும். அந்த
சாட்சி நிலை என்பது, எதையும் நடுவே எனை நிறுத்திக்
கொண்டு, விட்டுக் கொடுக்கும், பொறுமையாகும்.



இந்திரியால், வாக்கு குறைந்து நின்று விடும்
போது, வாக்கு மனதில், ஒடுங்கி விட்டது என
பொருள் கொள்ளலாம்.
எல்லாம், ஸ்ரீபகவான் செயலே என்பது பக்தியமாகும்
ஸ்ரீபகவான் வேறு, நாம் வேறல்ல. என்பதுவைத்தியமே.
இந்திரியால், மனம் அறிவில் ஒடுங்கிவிட்டது,
எனப்பொருள் படும். மனம், அறிவில் ஒடுங்கிய
நிலையில், சந்தேகம்! தடுமாற்றம்! பயம்!
வராது! வரமுடியாது! வர இயலாது. அப்படியே
சிலசமயம் வந்தாலும், சில வினாடிகளே தோன்றும்
மணிக்கணக்கில்! நாள்கணக்கில்! தோன்றாது.
இதுவே நாம் "அறிவு" ஆத்மா என்ற ஸ்ரீபகவான் சொருபமாக
இருக்கிறோம். எனப்பொருள் படும். அந்த அறிவே
பேரறிவாக மாறும் போது, நாமரூப, ஜக ஜீவ,
தோற்றம் எல்லாம், ஒன்றே என்ற அகண்டமான



அகண்டானந்தம் உணர முடியும்!

இந்நிலையே, சொல்லும் பொருளும் அற்று!

அதாவது, சொல் என்ற வாக்கும் இல்லாமல்;

வாக்கினில் விளங்கும், நாமரூபம் அனைத்தும்

(பொன், பொருள், உறவு, சுற்றம், நட்பு,

மண்) என்ற, உறுதி நிச்சயம் ஆகும்!

நாமம் என்ற சொல்லும் இல்லாமல்;

ரூபம் என்ற பொருளும் இல்லாமல்;

இருப்பது ஒன்றே என்ற ஒரே சொல்லுடன்;

நடப்பது நலமே என்ற ஒரு பொருளுடன்;

மனம் மயமானால், சொல்லும் பொருளும் அற்று;

வேண்டாத செயலும் அற்று; சும்மாவே!

சுகமாகவே! இருக்கலாம்!!



# கோபிகை பதில்!

ஸந்தியா :- சுத்த சிதாகாயம் என்ற வஸ்து என்றால் என்ன?

வைத்தியம் :- சுத்தம் என்றால், காலாதீத பர சொரூபத்தை, ஸத்தாக சொல்லும் நிலையாகும். சிதாகாயம் என்றால், ஸித்+ஆகாயம் = ஸிதாகாயம் ஆகும். அதாவது, ஸத்தே மற்றொன்று போல், பிரகாசிக்கும் நிலையிலும், தம்மை அசைக்கும் நிலையிலும். தம்மைத்தாமே, ஸித் என ஆக்கிக் கொண்டு, தமக்கு உபகரணமாக, தம் நிழலான, யோகமாயாவை நிர்மலமான ஆகாயமாக்கி, மண்ணும் & ஜலமும்/(பரமும் யோகமாயாவும்) இணைந்து பிணைந்து, நாம ரூபம் உண்டாக்கத்தக்க, ஓர் களிமண் என தன்னைத் தானே, உண்டாக்கிக் கொண்டதென, பொருள் கொள்ளல் வேண்டும். எந்த வஸ்து என்றால்? காலாதீத பரமாகிய, அந்த வஸ்து எனபொருள்படும்.



19

காவாதீத பர
சொரூபமானது
தன்னைத் தானே
ஆக்கிக் கொண்டா
லும், அது மறை
தோஷ குணத்திற்காக
அதை நீக்கும் பொருட்டு
இறை குரு பர கருணை
நிலையில் தம்மைத் தாமே ஆக்கிக் கொண்டது
அக்கருணை மாயா மனைவிக்கே!

ஸத்தியா :- கருணையுடன், பர, தத், த்வ, வடிவாக, இரண்டு ஏழ காரணம் என்ன?

வைத்தியம் :- அந்த காவாதீத பரமே, தன்னை மற்றொன்றாக, ஆக்கிக் கொண்டதென, உணர வேண்டும். அந்த ஒன்றுக்கு, அன்னியமாய், எதுவும் இல்லை என்பதே ஸத்தியம். இந்த நிலையில், வாக்கியே விளக்கத்திற்காக, தமக்குத் தாமே, குரு & சிஷ்யபாவனையாகவும்! ஸ்ரீபகவான் & பக்தன்! எனவும் ஆக்கிக் கொண்டது. இப்படி தாமே, ஆகிக் கொண்டதை, "கருணை" என, உபசார வசனமாகச் சொல்லலாம். இக்கருணை, எப்படி இயங்குகிறது என்றால்?

"பர| தத்| த்வம்|" என்ற நிலையில், அதாவது, த்வம் பத சொரூபத்தை, ஆட்கொள்ளும் நிலையில், பரசொரூப ஸத்குருவாகவும்! தத்பத சொரூப, ஸ்ரீபரமாத்மா என்ற ஸ்ரீபகவான்! ஆகவும்! அதாவது, இதை ஒரே வரியில் சொல்வதென்றால்?




பரமாகிய அதுவே (20)
ஸ்ரீபகவானாகவும்!
பக்தனாகவும்!
ஸத்குருவாகவும்! ஸத்
சிஷ்யனாகவும்! வந்து
கருணை யென்று ஓர்
மஹாவாக்கியத்தைப்
போட்டு, உள்ளத்தைக்
கெடுத்து! உள்ளதை கொடுத்து! நாம்நாமா
கிய நிலையில் விளையாடுகிறது. உள்ளத்தை
கெடுத்தும் நிலையில் உள்ளம் அளவிலிட்டபடியே என
தெடுக்கிறது. அது இவ்விதம் கதை கதையாக பேசப்படுகிறது

பரசொரூபமே! ஸ்ரீபரமாத்மாவாகவும்!
விளையாட்டின் நிமித்தம், மாயாமனம் வசம்
அகப்பட்டுக்
கொண்ட, ஜீவாத்மாவாகவும்! ஆனது என்பதே
ஸத்தியம்.

ஆகவே இதுவே இறை! பரகுரு! கருணையாகும்.

இதை, மன நெகிழ்வுடன் பாடும் போது!

"படியெல்லாம் கடந்த, சுத்த
பிரம்மவஸ்துவாக இருந்தும்;
பஜனையில் மகிழ்ந்து தோன்றும்;
திவ்விய மூர்த்தியே! ஒருகணத்தில்!
எமது உள்ளத்தை, உருக வைத்த,
உன் கருணை பிரவாகத்தை.
எப்படி புகழ்வோம்?????
என்ற நிலையில், அதுவே அதை, ஆண்டு கொண்டது.
என்று உபசார வசனமாகச் சொல்லலாம்!



கேள்வி கேட்பது (21)
மனமே கற்பனை
வடிவில் கவ்வி
கேட்கிறது. அதன்
காரணம் உடைமையும்!
உரிமையுமே! அமை
கிறது. இது அம்மன
மடமையாகும். இதற்கு மனமே பொறுப்பாகும்
வேறு யாரும் பொறுப்பில்லை.

ஏன் அப்படி சொல்கிறோம் என்றால்?
அதுவே, தனக்குத் தானே, விளையாடிக் கொண்
டிருக்கிறது! என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஸத்தியா:— அது ஏன் அவ்விதம் விளையாட
வேண்டும்? அது அதுவாக இருக்கும் நிலையில்,
விளையாட்டு எதற்கு?

வைத்தியம்:— அது அதன் நிலையில், விளையாடினால்
உனக்கென்ன?

ஸக்தியா:— உனக்கென்னவா? அவஸ்தைப்
படுவது, நாங்களல்லவா? உங்களுக்கென்ன?
ஓர் கோவணம் மட்டும் போதும்? அதுவும் உங்
கள் நிலைக்கு தேவையில்லை தான்?

வைத்தியம்:— இப்படி பேசுவது யார்?


ஸக்தியா:— யாரா? யாமே பேசுகிறோம்?
யாமே கேட்கிறோம்?

வைத்தியம்:— அந்த யாம் என்பது தான்,
யார் என்று கேட்கிறோம்?

ஸக்தியா:— யாமே நீங்கள்! நீங்களே யாம்!
யாம் தனியே இல்லையே?

வைத்தியம்:— யாமே நீ! நீயே யாமானால்! இக்
கேள்வி எவருடையது? அக்கேள்வி எம்முடைய
தல்லவே?





பரசொரூப விளையாட்டு எனச் சொல்வது ஓர் உபசார வசனமே. அதை அதன் நிலையில் சொல்வதானால் அறிவின் நிலையில் பர கருணை என்றே சொல்லலாம். அதை மனம் கொண்டு நோக்கினால், தோஷம் தான் தோன்றும் (22)

ஸத்தியா:- (சற்று ஆழ்ந்து சிந்தித்துவிட்டு) ஆமாம் தாங்கள் எந்த விறடியும், பேசும் நிலையில்; பரமாத்மாவாகவும் (ஸ்ரீவகவாநகவும்) ஆனந்தானுபவ நிலையில், அதுவாகவும் (பரமாகவும்) இருப்பதை காணவில்லை. காணமுடியாதுதான். ஆனால் என் அறிவு உணர்வு நிலையில், உணர்கிறேன். ஆனால் உங்கள் பக்தியவாக்கும்பொழுதும், என் நம்பிக்கையின், வைராக்கியத்தின் வழியும், யானும் தாங்களும் ஒன்றே! ஆனால் இக்கேள்வியும், அதன் குழப்பமும், என்மிடமும் இருக்கமுடியாது! இருக்கக்கூடாது! இருக்க இயலாது! இம்மனோ சஞ்சலமும்! அதனால் தாவதிரமமும் உண்டாகிறதே! அது எவருடையது?

வைக்கியம்:- நீதானே குழம்புகிறாய்? அது உனக்குத்தானே, தெரியமுடியும்?

ஸத்தியா:- அது என் மனக்குழப்பம்தான். அதுசரி அந்த பரசொரூபத்திற்கு, இவ் விளையாட்டு தேவைதானா?

வைக்கியம்:- அது எங்கே விளையாடுகிறது? அது சும்மாவே சுகமாகவே, ஆனந்த சொரூபமாகவேதான் இருக்கிறது.



பொய்கதை:- (23)

நாமரூப ஜக ஜீவ
ஈஸ்வராதிகளின்
இருப்பு! இயக்கம்!
அவைகளின் விளக்கம் சாதன
இவை எல்லாம் பக்கம்
பக்கமாக எழுதிய கதை
எல்லாம் அந்த பொய்யே!
மெய்மை! பொய்யானதோ
அவை அனைத்தும் உதாரணத்தை காட்டுவதாகும் பொய்கதையாகும்
அதனால் நீயோ! யாரோ! அதுவோ! நானோ!

வைத்தியம்:- இன்பதுன்பமோ! லாபநஷ்டமோ! கஷ்டம் கவலையோ! மனோ அசைவின் சஞ்சலமோ! உன்மனதிடம் தானே தோன்றுகிறது?

வைத்தியா:- என் மனதிடம்தான் தோன்றுகிறது. ஆனால், அதுவாகிய பரம்! ஏன் நம்மை தானே இரண்டு பகுத்துக் கொள்ள வேண்டும்? அப்படி அது நம்மை, இரண்டு பகுத்துக் கொண்டதால்தானே, இப்படி மனோ அவஸ்தை தோன்றுகிறது?

வைத்தியம்:- அது இரண்டுபட்டதோ! அல்லது இரண்டு பகுத்தியதோ! ஏக்காலமும்! எக்காலமும், இல்லவே இல்லை! பொய்யை, மெய்யாக நம்பிய வர்களுக்கே, இப் பொய்க்கதையைச் சொன்னோம், சொல்கிறோம்? உனக்கில்லையே? நீ அம்மா சுகமாக இருக்கலாமே?

வைத்தியா:- நல்ல வேடிக்கை பாபா! கொட்டடியையும் ஆட்டி விட்டு! துடையையும் கிள்ளி விட்டால், எப்படி தாங்க முடியும்?

வைத்தியம்:- கொட்டடி ஆட்டுவது எம்குரு! துடையைக்கிள்ளுவது, உன்தாலஹினி!



வினை உடல் (24)
வினைதாக்கும்
போது உன்மனம்
அதில் ஆழ்ந்து
போகாமல் எல்லாம்
நலமே என்ற உணர்வை
பெறுவதுவே உன்சாதனை
இலகுவாக பொறுமையுடன்
ஏற்று ஏற்று பழகிவிட்டால்
உடல் உணர்ச்சியாகிய பொய்ப்பழக்கம் விட்டுவிடும்
உண்மை உணர்வாகிய மெய்ப்பழக்கம் உன்மனதை
பற்றிக் கொள்ளும். அந்நிலையே பிரம்மானந்தம்.

ஸத்தியா :- புரியவில்லையே பாபா?

வைத்தியம் :- உடலையும்; அனைத்து பொருள்களையும்
ஏன் வீணாக உடைமையும்! உரிமையும்!
பாராட்டவேண்டும்? அப்படி பாராட்டுவது, உன்
மனம்தானே? அதை விட்டுக்கொடுக்கலாமே?

அதாவது, பொறுமையுடன், நலமே என ஏற்றுக்
கொள்ளலாமே? அப் பொறுமை என்ற, விட்டுக்
கொடுப்பது இருந்தால், வினை உடல்! வினை
சம்பவம் தான் துன்புறுத்தும் இடையகின்றும்
என மறக்கப் பழகலாம்! அப்புறம் மறந்தும் போகும்!
வினைக்கூட்டின் செயல், எனது என ஏன் பாராட்டுகிறாய்?

ஸத்தியா :- அப்படி பழகிவிட்டோமே பாபா! இனி
என்ன செய்வது?

வைத்தியம் :- பழகி பழகி! பழகி பழகி! பழகி
பழகி! பழகி பழகி! பழகி பழகி! **பழகு**
போனகாலங்கள், போதாதா ஏங்காய்?
இனியாவது?

# கேள்வி & பதில்



ஆரம்பம்

விட்டு கொடுப்பது! (25)
பொறுமை! சகிப்
புத்தன்மை! இவை
களை இயல்பாத்தன்மை
யாகவும்! சோம்பலா
கவும்! கையாலாகா
தவன்என்றும், இக்கலி
யாவி பேசுவது அதன் பெருமை
வேடிக்கை பார்த்து தர்மாவை
யாரும் சீண்டி விட்டு ஆகும். அடுத்த பக்கம்.
பெருக்குவது கலியின் சிறப்பு

வைத்தியம்:- பொறுமை! சகிப்புத்தன்மை! விட்டுக்
கொடுப்பது ??????????????????


பொறுமை! சகிப்புத்தன்மை! விட்டுக் கொடுப்பது!
?????????????????????????

பொறுமை! சகிப்புத்தன்மை! விட்டுக்கொடுப்பது!
???????????????????????

என மறந்து! மறந்து! மறந்து! மறந்து! மறந்து!
எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே!
என உன் மனதை **பாஸாய்** மாற்றுவாயே?

அது எந்த விடையும், சும்மாவே சுகமாகவே இருக்கிறது.
ஆனால், உன் மனமோ, பார்வையாலும்! கேட்பதாலும்!
அதுமட்டுமின்றியே பேசுவதாலும்! வட்ட வினையும்! அவ்வினை
யின், மனதை துன்புறும் போதாதா? மன வேதனையும் போ
இங்கு அது விளையாடுகிறது எனச் சொல்வதும் தாதா?
உன்மனமே! அது சும்மா இருக்கிறது என எண்ணுவதும்,
உன்மனமே! அதுவே நாம்! நாமே அது என உணர்வோடு
இருப்பதும், உன்மனமே! அறிவாகிய நடிப்பாகும்!





ஸ்ரீ பகவான் நம் பித்தை வரவாகாது என்றும், (26)
அஹங்கார அதிகார அபிமானம் மேலோங்க வேண்டும் என்ற ஓர் கலியின் நல்ல எண்ணத்தால் கைக்காரியம் கலி பண்ணத்தான் வேண்டும்.
விட்டுக் கொடுத்தால் நாம் சுதந்திரம் பெற முடியும். பொறுமையுடன் காத்திருந்தால், அடுத்த பக்கம்

ஸத்தியா :- எண்ணினால் பிறவி என்றும், மறந்தால் மரணம் என்றும், சொல்வது இம் மனதின் விளையாட்டு தானா பாபா?

வைத்தியம் :- உண்மைதான் ஸத்தியா!!!
உறங்குவது போலும் சாக்காடு, என்றும்,
உறங்கி விழிப்பது போலும் பிறப்பும், எனச்
சொல்லுவார்கள் ஸ்ரீ மஹான்கள்.

ஸத்தியா :- ஹே எம் அன்பான பாபாவே!
இம் மனதின், விளையாட்டை பற்றி, சற்று அறிவு றுத்த சொல்லுங்களேன்?

வைத்தியம் :- ஹே குழந்தாய்! ஸத்தியா!
மாயா ஓ மனம்! மனம் ஓ மாயா! இவ்விரண்டுமே, மாயா என்னும், புதை சேற்றுக் குழியில், ஒன்றாய் ஊறிக் கிடக்கும், இருமட்டைகளாகும்.

அவைகள், கல்ப கோடி காலம், பக்கம் பக்கமாய், எழுதிக் கொண்டு போனாலும், மோஹமும் (ஆசையும்) தணியாது. ஓர் முடிவும் உண்டாகாது. ஆறல் ஸத்தியமாய் நித்தியமாய்! ஸாஸ்வதமாய்! ஓரியல்பாயுள்ள மஹத்தை, சற்று உணர்ந்தாலும் போதும். மனம் ஓடிவிடும்! மஹத் நின்றுவிடும்! நனவில் கனவில்லை! கனவில் நனவில்லை! சுழுத்தியில் (ஆழ்ந்த உறக்கத்தில்)



அடுத்த நிகழ்ச்சி
நமக்கு அவஸியம்
விளங்கும் நிலைக்கு
ஸ்ரீபகவான் திருவை உண்டு
சத்தியத்தை கொண்டால்
வந்தவாறே முடிவுறும்.
வேறு எந்த சொந்த
வினையும் நம்மை தொடாது
ரஜோ தமோ குணங்கள்
நாசமாகும். ஸத்வகுணம் மேலோங்கும்.
நிலை கண்டு; அடுத்த பக்கம்

27

நனவும் கனவும் இல்லை! சுத்தமான **மௌனத்தில்**

நனவு! கனவு! சுஷுப்தி! ஆகிய இம்மூன்றும் இல்லை.

ஸத்கியா:- ஹே மாயா! இதை சற்று, தெளிவு படுத்துங்களேன். எத்தனை முறை, இதை தெளிவு பெற்றாலும், உங்கள் வாக்கின் அனுபவம், மேலும் மேலும், தெளிவை கொடுக்கிறது.

வைத்தியம்:- முன் நீ கூறிய வார்த்தையே, இதற்கு பொருந்தும். எண்ணில் பிறவி என்னும், மருந்தால், மரணம் என்பது, சற்று உள் ஆழ்ந்து நோக்கினால், நீ அதுவாகவே இருப்பாய். இதைக்காண், ஓர் அன்பர் பாடும் போது:- இறப்பும் பிறப்பும் பொருந்த, எமக்கு எவ்வண்ணம் வந்ததென எண்ணியாம் பார்க்கின்? மறப்பும் நினைப்புமாய் நின்ற, வஞ்ச மாயா மனத்தினால் வந்தது தோழி! என்றார்.

குழந்தாய்! ஸத்கியா! பேசப் பேசப் பிழை! என்பர் ஸ்ரீஞானிகள். மேலும் வார்த்தையினால், ஓர் முடிவு காண முடியாது; என்பதே ஸத்தியமாகும். காரணம்? வார்த்தைகள் என்பது, ஓர் அடர்ந்த காடு.

(முட் செடியும் கொடியும், பின்னவிட்டு மண்டி இருக்கும் காடு)



ஸ்ரீ பகவத் காட்சியும் (28)
அல்லது ஸ்ரீ பகவானின்
சாட்சி நிலையான மேலான
பேரானந்தம் இயல்பாக
பயிற்சி முயற்சி
இல்லாமல் தானே சத்
தியமாகும்! இவை சர்வார்
ப்பணம் பரிபூரணமாகி முழுவதும்
பின் பிரம்மார்ப்பணம் வரை நானும் இல்லாமல்
அனுபவ ஞானமாக சத்தியமாகும். இது இந்த
ஏழையின் அனுபவமாகும். முடிவுரையும்


என்றும்; அதன் உள்ளே புகுந்தவர் எவராயினும்
அவர் வெளியே வரமுடியாது! வர இயலாது!!
என்றும்
வார்த்தையின், மாயா ஜாலத்தினுள், சுற்றிச்
சுற்றி! சுற்றிச் சுற்றி! சுற்றிச் சுற்றி! சுற்றிச்
சுற்றி! சுற்றிச் சுற்றி! சுற்றிச் சுற்றி! அவ்வார்
வார்த்தையை விடவும் முடியாது! வெளியே வரவும்
முடியாது!! ஆகவே இது பற்றி யாம், விளக்கம்
தரவும் இயலாது! நீ விளக்கம் பெறவும் முடியாது.

# ஒன்றைபற்றி ஒரேகத்திரு!

ஒன்றைப் பற்றிக் கொண்டு, ஒரே வீட்டில் இரு!

இதற்கு வார்த்தை குறைப்பதல்லாது, வேறு மார்க்கம்
இல்லவே இல்லை. ஜாக்ரதையின் எண்ணமே, சொப்ப
னமாக வருகிறதேயன்றி, வேறொன்றுமில்லை. இதை
மட்டுமே, ஆழ்ந்து உணர்வாயாக.

„மறைவிருந்திட வரும் முன்னும், நாமரூப ஜகம் இல்லை.
அழிந்த பின்னும்."




விபரம் தெரியா நிலையிலும்! வயோதிக நிலையிலும்! நாம ரூப ஜக ஜீவ நிகழ்ச்சி நம்முன் நடைபெற்றாலும் எழுச்சியும்/ வீழ்ச்சியும்! நம்மிடம் இருப்பதில்லை. அப்போதும் கண் பார்க்கும். காதும் கேட்கும் (29)

ஆனால் வாக்கு விவகரிக்காது. விவகரிக்க முடியாது விவகரிக்க இயலாது. காரணம்? அருந்தபதிகம்.

நாம ரூப ஜகம், மனை விருந்தியானவையே, இருப்பதைப் போலும்; இயங்குவதைப் போலும். மாறி மறைவதைப் போலும். ஓர் மாயா ஜாலம் செய்கிறது. இம்மாயா ஜாலம், நாம ரூப ஜகத்திடம், இல்லவே இல்லை. இம்மாயா ஜாலம், வஞ்ச மாயா மனதிடமே உள்ளது!

பச்சைக் குழந்தையாய் விபரம் தெரியாமல் இருக்கும் போதும்! வயது முதிர்ச்சியில், ஒன்றும் இயலாக்கண்மையாய், இருக்கும் போது நாம ரூப, ஜக ஜீவ, உறவு சுற்றம், நட்பு! பொருள் கொடுக்கல் வாங்கல்! போக்கு வரவு! இருந்தும், இல்லாமலே ஆகி விட்டது! காரணம்? முதலில் மனம் ஜனிக்கவில்லை! இரண்டாவது, மனம் செயலற்று, சூன்யமாகி விட்டது!




மத்தியில் (வாலிப பருவத்தில்) மனம்
இருந்தாக பேசப்படுகிறது. அங்கு
பேசிப் பேசியே! மனதில் இருப்பு கொண்டு
இருக்கும். அங்கு நாம ரூப, ஜக ஜீவ, தோற்றம்
பொருள்கள் **வந்து** தெரிகிறது. அது
எப்போ, எப்படி, **போகும்** என தெரியவில்லை!
வந்ததோ! இருந்ததோ! வந்த வழியும்?
இருந்து போன வழியும்! எந்த தடயமும்
இல்லாமல், மாயமாய் மறைந்து விடுகிறது.
அங்கு தொட்டுக்காட்டவோ, சுட்டி உணர்த்தவோ
எதுவும் இருப்பதில்லை. பின் எப்படி, இந்த ஜகத்தை
உண்டு எனச் சொல்ல முடியும்? ஆனால் இந்த
**மனப்பிழப்பாகு** பின்னிப்
பிணைந்து (விடேன்! விடேன்! விடேன்! விடேன்!
விடேன்! விடேன்! விடேன்! விடேன்! விடேன்!
என்று)



(31)

உன் ஆழ்ந்த
உறக்கத்தில்
உன் உடலும், உடைமை
களும், செயலற்ற
நிலையில் இருப்பதால்
அது இறந்த நிலையே
அந்நிலை விழிப்பின்
நிலையிலும் பெற வேண்டும்.
அதுவே நனவில் சுழுத்தி ஆகும்.
பெற முடியும். சன்மார்க்கம் சர்வார்ப்பணமே ஒன்றே வழி

புண்ணியபாப வினைகளை, வலிய ஏற்கிறது!

ஆகவேதான், மனம் எண்ணுதல் மட்டும்,
நாமரூப, ஜகஜீவ, பொருள், உறவு சுற்றம் நட்பும்,
உன் **உடலும்** ஜனனம் என ஆகிறது!

உன்மனம் மறந்தால் மட்டும், நாமரூப, ஜகஜீவ
பொருள், உறவு, சுற்றம் நட்பும், இவைகளை சார்ந்த
உன் **உடலும்** மரணம் என ஆகிவிடுகிறது!

(மேலே படிக்கவும்!) புரியவில்லையா?

இங்கு உன்மனம் மறப்பதில்லைதான்! மறக்க
முடியாதுதான்! மறக்க இயலாதுதான்! அதன்
காரணம்? **உடைமை**யும் அகந்தையும்
நானே கர்த்தா என்றும், என்னால்தான் ஆகும் என்றும்,
எல்லாம் என்னுடையதே என்றும், சொந்தம்
கொண்டாடிய வினையும்! **உண்மை** என்ற



உன் வாக்கே நாம (32)
ரூப ஜக ஜீவ தோற்
றத்திற்கு உயிர்
கொடுக்கிறது. அவ்
வாக்கு உடைமை உரிமை
என்ற நிலையில் சொந்த
பந்த, பாச நிலையில் ஆடு
வதால் ஜகம் உயிர் பெறுகிறது. இதற்கு உன்
மனமே ஆதாரம்! ஆகாரம்! அமர்க்களம்?

நிலையில் (ஆதிக்கம்! அதிகாரம்! அகராதி!
இவைகளின் (மனம்) வக்ர குணங்களில், சிக்கி இருப்பதால்)
உன்னால் மறக்கவோ! மறுக்கவோ! விலக்கவோ!
விடவோ! முடியவேமுடியாது! முடியவே முடியாது!
முடியவே முடியாது! என பிரமாணமாகச்
சொல்லுவோம். பின் எப்படி மறக்க முடியும் என்றால்?
முன்பு மடல்களில், கூறிய நிலையில், எல்லாம் நீயே
எல்லாம் உன்னால், எல்லாம் உனக்கே, என்ற
சர்வார்ப்பண நிலையில் மட்டுமே! உன் மனம்
மறக்கும்! பின் உன் அனுபவத்தில் மறந்தும்
போகும்.
பின் இறந்தே போகும்! மனம் மறைந்தாகும்.
இங்கு உன் மனதில், ஓர் பயம் உண்டாகும்!
எப்படி என்றால்:- முன்னே பின்னே, இறந்திருந்தால்,
சுடுகாட்டை பற்றி, விளக்கம் தெரியும். எப்படி
குழிதோண்டி புதைப்பார்கள்? என்றும், எப்படி
விறகை அடுக்கி, சுடுவார்கள்? என்றும், தெரியும்!

(33)



உன் வாக்கை ஸ்ரீபகவானுடையதாக ஆக்கி விட்டால் உன் வாக்கு அறிவாக மாறி விடும். அறிவு நிலையில் மனம் ஆகும் போது, நாமரூப ஜக ஜீவ தோற்றம் மண் பதுமைகளாக மாறி விடும். மாறியே ஆக வேண்டும்! அந்நிலையில் நாமரூப ஜகம் உயிரற்றதாக ஆகிவிடும் இது உறுதி.

நாம் செத்துப் பழகவில்லையே! என் செய்வோம்? என்றும்? அதேபோல்?

நாம் ஸ்ரீ பகவானை, நேரில் பார்த்துப் பேசி, பழகியிருந்தால், அவசியம், ஸ்ரீ பகவான் வருவான்; நம்மை அரவணைத்து காப்பாற்றி விடுவான் என்ற "நம்பிக்கை" வரும்! அதுவும் இல்லை!


பந்த முக்தி! என்றும், பர முக்தி! என்றும், நாம் படித்தும்! கேட்டும்! இருக்கிறோமே தவிர, நாம் "நேரில்" பார்த்தோ, அனுபவித்தோ, இதுகாலபரியந்தம் அறியோம். அதுவும் இல்லை! ஆனால்?

நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்களில், வந்த கணவன், மனைவி, குழந்தைகள், அம்மா, அப்பா, மற்றும் உறவு, சுற்றம் நட்பு, இவைகளும்! நாம் தேடிய "பணமும்"! நாம் தேடிய, "சொத்து"க்களும்! நாம் கஷ்டப்பட்டு தேடிய,




நேற்று நேடியும்.
இன்று இருந்ததும்.
நாளை இல்லையே.
ஆனால் அவன் நாமா
வினால் செய்யும் எதிர்
பார்ப்பு இல்லாத தர்மம்
உன் ஜன்மாவை
கடைத்தேற்றுமே!
இதற்கு உத்திரவாதம்
நம் முன்னால் நமக்காகவே வாழ்ந்து காட்டியும் இன்
றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்களின் ஸ்வய அனுபவமே!

"படிப்பின்" திறமையாலும்; எம்
கடும் முயற்சியால், யாம் பெற்ற பட்டம்!
புகழ்! கௌரவம்! அந்தஸ்து! அதைச் சேர்ந்த
"கூட்டங்களும்" அதைச்
வந்த பரிசு பொருள்களும்; இன்றும், இந்த
விநாடியும், எம் கண் முன், பத்திரமாய்! ஸாஸ்
வதமாய்! பிரத்தியட்சமாய்! இருப்பதை
"யாமும்" மற்றும் "அனைவரும்"
பார்க்கின்றனர்! கேட்கின்றனர்! அது பற்றி
பேசிப் பேசியே! பேசிப் பேசியே! பேசிப் பேசியே!
பேசிப் பேசியே! பேசிப் பேசியே! பேசிப் பேசியே!
பேசிப் பேசியே! பேசிப் பேசியே! பேசிப் பேசியே!
விளக்கம் கொடுக்கவும்! விளக்கம் வாங்கவும்!
செய்கிறோமே ???????????????????
ஆனால் இவைகளை விட்டு விட்டு? - - - - - - - -



பக்தியில் ஸ்ரீ பகவானை காண முடியுமா? -------
ஞானத்தில் அதுவே நாம் என உணர முடியுமா?? ----
ஹே அன்பான பாபாவே! எங்கள் மனோ பயமில்லாம்,
எங்கள் கண்களுக்கு, நேருக்கு நேர் காண்கின்ற,
முன் நாங்கள் சொன்ன, நாம ரூப, பொருள்களை விட்டு
விட்டால், என்ன ஆவோம்? எப்படி இருப்போம்?
என்ன செய்ய முடியும்? என என்னுள் பலபல,
கேள்விகள், எங்களை பயமுறுத்துகிறதே, என் செய்வோம்?
இப்படி ஓர் எண்ணம் தோன்றுகிறதா?
வைத்தியம் :- ஹே அன்பான ஸகியா! உன் சந்தேகம்
நியாயமானது தான். இதை உணர். ஓர் அன்பர், உணர்ந்த
உணர்வு நிலையில், பாடிய பாடல் ஆவது?
உண்டு உண்டு, உறங்கியதை, கண்டதே அல்
லாது, ஒரு பயனும் அடைந்திலோமே! என்கிறார்.
ஓர் குழந்தை பிறக்கும் போது, தம் இரு கைகளையும்
இறுக மூடிக் கொண்டே???



அனுபவிப்பவன் 36

என்பது வந்த மனம் ஆகும். உடைமை & உரிமை! இவ்விரண்டுமே அப்பீண் கற்பனைக்கு காரணம் ஆகும். எல்லாம் நீயே! எல்லாம் நீயே! எனது வைத்த நிலையில் சர்வார்ப்பணம் செய்தால் உன்னதே உடைமையும்! உரிமையையும் அனுபவிக்கும்

கோடானு கோடி ஆசைகளை அனுபவிக்க வேண்டும் என்றும் "அனுபவிப்போம்!"

(அனுபவிப்பது ஏன்??? அனுபவிப்பவன் எவன்???)

ஏன்? ஏன்? ஏன்? என்ற கேள்விக்குறியுடனே பிறக்கிறான். (அங்கே ஒன்றுமில்லை)

தன் அந்திம காலத்தில், உயிர் பிரியும் போது,

ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!

இல்லை! இல்லை!! இல்லை!!!

என்றும், கைகளை, அகல விரித்துக் கொண்டே, இறந்து விடுகிறான். இந்த அவல நிலைக்காகவா நீ பிறந்தாய்?

கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! உண்டதே இன்பம்! என எண்ணி, அழிந்து கெட வேண்டாம்!



(37)

ஸ்ரீபகவானவன்
எல்லாம் யாமே!
எல்லாம் எமதே!
என அவஸியம் ஒருக்
கொள்வான். பின்நீ
நாமரூபத்தை கண்டாலும்,
அதுபற்றி, கேட்டாலும்,
அதுசம்பந்த எழுச்சியும்! வீழ்ச்சியும்! சூரியனின்
முன்வந்த பனியென நீங்கிவிடும்! தொடரும்

ஓர் மறைந்தான சக்தி உண்டென்பது, உலகறிந்த விஷயமாகும். அதுவே நாம் என்பது, ஸ்ரீ மஹான்களின், அனுபவமாகும். அது அகண்டமாகும்!

அதுவே, உன் நிலைக்கு, கருணையோடு, இறங்கி வருகிறதென்பது, ஸ்ரீயாதவ நோக்கமர்களின், ஸ்வய அனுபவமாகும். அது கண்டமாகும்!

அகண்டம்:= அளவிடற்கரியது! கண்டம்:- அளவுக்கு உட்பட்டது! ஆகவே, கண்டமாகிய, ஸ்ரீபகவானை, அறிந்து கொண்டால், அகண்டமான பரசொரூபத்தை, உணர்ந்து, அகண்மயமாகலாம். நாமரூப, ஜக, ஜீவ, சொரூப யாருள் & உறவு, சுற்றம், நட்பு, இவைகள், உண்டென்ற, கற்பனையை தவிர்த்து, இவை அனைத்தும்,

ஆவரணங்கள் தானே! இவ்வாவரணங்கள் அனைத்தும், பொன்னுக்கு அன்னியமில்லை, எனவே உணர்வாலே உணர்ந்து (ஆவரணம் = நாமரூப ஜகஜீவ சொரூபங்கள்) பொன்னாகும் உபாசனை ஸித்தியாகிய, ஸ்ரீபகவானை உணர்ந்து



அவனே நீயாய்! (௩௪)
நீயே அவனாய்!
இருப்பது ஸத்தியமே.
இந்நிலையில் உன் பொருள்
மீது உனக்கு ஆசை
உண்டாகாது. அந்த
மனம் அறிவான தன்மை
பிறவி மனோ அவஸ்தைகள் இல்லை
தன் ஸ்வயமாகவே எல்லாம் ஒன்றே! அதுவேமே!
ஜகமும் முழுதும் அது நாமே! நாமே அது என்பது

அம்மையொன்றாகிய ஸ்ரீபகவான், மண்ணாகிய, பரத்துக்கு
அந்நியமில்லையெனச், சந்தேகமற தெளிந்து,
பொன்னும் மண்ணும்! இரண்டும் ஒன்றே! அதுவே நாமே!
நாமே அது! என உணர்வதே உன் பிறவிப் பயனாகும்!
இவை அனைத்திற்கும் மூலம், உன் நம்பிக்கையாகும்!
அன்னை சுட்டிக் காட்டும், தந்தையை, நம்புவதும், உன் நம்பிக்கையே!
தந்தை சுட்டிக்காட்டும், குருவை நம்புவதும், உன் நம்பிக்கையே!
குரு ஸ்ரீபகவான் ஸத்தியமென, சொல்லும் வாக்கை, நம்புவதும்,
உன் நம்பிக்கையே! ஸ்ரீபகவானே ஓர் ஸத்குருவாக வந்து,

**பிரம்மஸத்யம்! ஜகத் மித்தை!** என


உணர்த்தும், சுத்த அத்வைதத்தை, நம்புவதும் உன்னுடைய
பிரம்மம் ஸத்யம் என்ற நம்பிக்கையும்! **அனந்த**
நாமரூப உலகம் பொய் என்ற வைராக்கியமும்!
உன் ஸ்வய அனுபவமே, மிக, மிக, மிக, மிக, மிக, மிக,
முக்கியமாகும். நம்பினோர் கெடுவதில்லை என்பது ஸத்தியமே!
அதுவே முழுக்க முடிவாகும்!

(39)



எம் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ பகவான்! ஓர் முறை சொன்னதாவது:- குழந்தாய்! திருவடி பாபா! எமக்கு ஓர் முறை, எம் மெய்அன்பர்கள் நிமித்தமாக, "யாமே" ஏற்றுக் கொண்ட ஓர் உபாதையானது, தொண்டை நோய் என ஆனந்தமாக, நடிப்பின் நடிப்பில், ஏற்றுக் கொண்டோம். அது சமயம், வாய் மூலமாக, எதுவும் (ஜலம் கூட) செல்ல மறுத்தது வாய். ஆனால் வெளி உலகிற்கு காட்டும் நிமித்தம், யாம் கடும் அவஸ்தைப் படுவது போல், நடித்தோம்! ஓர் திட ஞானியால் தான் அவ்வாறு நடிக்க முடியும். ஏனையோர், அதை நம்பியே ஆக வேண்டும். காரணம்:- அவர்கள், தம் உடலையும், அவ்வுடல் இயக்க மனதையும், தன்னுடையதாக நம்புவதால், எம் மாற்றத்தால், அவர்கள் ஏமாந்து விடுவர். ஏமாந்தே ஆக வேண்டும். இதில் எவரும் விதிவிலக்கில்லை. மனம் எவர் வசம் இருக்கிறதோ, அவர் எம் நடிப்பை உணர்வார் மற்றவர், உண்மையென நம்பியே ஆக வேண்டும்!


(மனம் வசப்பட்டவர்)



அது சமயம், அன்பர்கள் கூறும், அனுதாப வார்த்தையாவது :- ஹே பகவானே! ஹே குருதேவா! இவ்வவஸ்தை ஏன்? தாங்கள், அன்னையிடம் முறையிட்டு, இவ்வுபாதையை, குறைக்கவும் முடியும்! (அல்லது) இல்லாமல் பண்ணவும் முடியும்! என கெஞ்சி, கெஞ்சி, கெஞ்சி, அழுது முறையிட்டனர். யாமும் சரி யென சம்மதித்தோம். (ஓர் ஒப்பனைக்காக)

யாம் பூஜை அறையினுள், அமர்ந்த வண்ணம், முக்கியமான மெய் அன்பர்கள், ஒரு சிலரை (பக்குவ ஆன்மாக்களை) மட்டும், பூஜை அறைக்கு, வெளியில் அமர வைத்துவிட்டு,

குழந்தைகளே! அம்பாளை நீங்கள் தரிசிக்க முடியாது. அப்பாக்கியம் எவரும் பெறவில்லை. ஆனால், அவள் வாக்கு மட்டும், அசரீரியாக, (சரீரம் தோன்றாத ஒலியாக) நீங்கள் கேட்கலாம். கவனம் தேவை; என எச்சரித்துவிட்டு, பூஜை அறையினுள், அமர்ந்து கொண்டோம். எம் மனக்கண்களை மூடி, அடைத்துவிட்டு, எம் அறிவுக் கண்ணை திறந்த நிலையில் (சாட்சி நிலையில்) இருந்து கொண்டு; அவனே யாமாய்!



யாமே அவளாய்! ஆன நிலையில், ஓர் நாடகம் நடந்தது. அந்த நாடக நடிப்பை, நாடகபாணியில் தருகிறோம், கருத்துடன் உணர்க.

ஸ்ரீ பரமஹம்ஸர் :– அம்மா! பவதாரணி! லோகமாதா! கருணையின் வடிவே! உன் குழந்தை, ஏதோ ஓர் காரணத்திற்காக, அழைக்கிறது! பூர்த்தி செய்வாயாக!


ஸ்ரீ அன்னை பிரத்தியட்சமானாள்!

ஸ்ரீ அன்னை :– குழந்தாய்! எம்மை, அழைத்த காரணம் என்ன?

ஸ்ரீ பரமஹம்ஸர் :– அம்மா! அழைக்க வைத்ததும் நீயே! அழைத்ததும் நீயே! எதற்காக எம்மை அழைக்கச் செய்தாயோ, அதன் விளக்கத்தையும், நீயே உணர்வாய்! யாம் (இத்துவம்) ஓர் உன்கை பதுமைதானே?

ஸ்ரீ அன்னை :– உண்மைதான் குழந்தாய்! உன்தூலம் எம் கைப் பதுமைதான். அது ஜடம்தானே? அது அழைக்கவில்லையே? எப்படி அழைக்கும்? ஆனாலும், நீயும்! யாமும்! ஒன்றே! ஆனால், அழைத்தது, உன் **மனம்** ஆகும்.





சும்மாயான மனம் நாமரூப ஜக ஜீவ தோற்றங்களையே சொந்தம் கொண்டாடும். ஸ்ரீபகவானை சொந்தம் கொண்டாடாது. காரணம் வினையே மனதின் குறிக்கோள் வினையே மனதின் குணம். வினை இல்லையேல் மனம் செயல் படாது. வினையை எதுவல்ல என விட்ட மறு கணம் மனமானது அறிவாகி விடும். (42)

ஸ்ரீஅன்னை :- வலது என, சொந்தம் கொண்டாடிய மனமே, இப்போது அழைக்கிறது. அம்மனம் எம்மிடம் இல்லை. ஆகவே அம்மனதையே, யாம், அறிவு சொரூபமாக, இருந்து, கொண்டு கேட்கிறோம். உன் மன வாக்கை வாங்கிக்கொண், யாம் பதில் கொடுக்க முடியும்? உடல் உலகம், வாக்கிற்கு கட்டுப்பட்டதாகும். ஆகவே, உன் வாக்கால், விளக்கம் கொடு. பதில் தானே வெளிவரும். இப்போதும் மனம் பேசுகிறது.

ஸ்ரீபரமஹம்ஸர் :- ஓஓஓ நல்ல வேடிக்கையம்மா! இச்சரீரமாகிய, தொண்டையில், ஓர் உபாதை வந்து, பலகாலமாகிவிட்டது. எதையும் உள்ளே விழுங்க முடியவில்லை. ஜலம் கூட, அருந்த முடியவில்லை. அத்தனை கடும் உபாதையாக தோன்றுகிறது. இதற்கு மாற்று உபாயம் உண்டா?

ஸ்ரீஅன்னை :- கொழந்தே! உனக்கு வலிக்கிறதா? உன் உடலுக்கு வலிக்கிறதா? உன் மனதிற்கு வலிக்கிறதா?

ஸ்ரீபரமஹம்ஸர் :- அம்மா! நீ இப்படியெல்லாம், கேட்பாய் என்று, எமக்கு தெரியும். யாம் இல்லை! ஆகவே வலி எமக்கில்லை.



உடைமை! உரிமையால்! ஜீவ
உடல்! எனது என (மு)
சொந்தம் கொண்டாடி
யதால், ஜீவ உடலில்
வரும் மாற்றத்தால்
அதை தம் கர்மவினையால்
வெளிப்படுத்திக் கொண்டு
அவ்வுபாதையை தனதாக
ஏற்று அவஸ்தையை காட்டு
வது இம் மனதின் மாயா ஜாலம் ஆகும்.

அடுத்த பக்கம் தொடரும் ---------

பரமஹம்ஸர் :— உடலோ ஜடம்! அதாவது, அது
அறிவற்ற மாம்ஸ பொம்மை! அதற்கும் வலியில்லை.
ஆனால், இம்மாயமனம், இவ்வுடல், எனது என
உரிமை! உடைமை! பாராட்டுவதால், எனக்கு
வலிக்கிறதென்று மனம் சொல்கிறது.
ஆகவே இங்கு, மனம் வசம் அகப்பட்ட மாந்தர்,
அம்மனதிற்கு, நிவாரணம் கேட்கின்றனர்.
(உடலை தனதாக, பாவனை பண்ணிய, மனம் கேட்கிறது.)
ஸ்ரீ அன்னை :— நல்ல வேடிக்கையான கேள்விதான்?
நான்! உடலே! என்ற அபிமானம் உள்ளபரியந்தம்,
அவ்வஞ்சக மனம், கேட்பது இயல்புதான். இதை
கவனி :— முதலில் மனதை காண்பிரு! இரண்டாவது
சரீரம் மாம்ஸ (மண்) பொம்மையே! அது ஓர்
புண்ணியமான விளைக்காடு! அனைத்து ஜீவசரீரங்க
ளையும், மண்ணாக உணர்ந்தால் எல்லாம் ஒன்றே!
(எல்லாம் மண் பொம்மையே) நீ காட்டும் இந்த



(44)

உடைமை! உரிமை! ஆகிய இவற்றின் சொந்தம் இல்லை என்று ஆகும் போது, மனு விதையே அம்மமனையே அறிவாகிவிடும் அந்நிலையால் விளையால் வரும் சரீர மாற்றத்தை அறிவு உணர்ந்து நோக்கும் போது, திருத்தன சிறுக்கும்! இறுக்கன பெருக்கும்! இது இயற்கையான நியதியென சும்மா சும்மா இருக்கும். அங்கு உபாதை தோன்றும். முடிவுறாது.

ஸ்ரீ அன்னை :- (உன்னுடைய) மண்மொரம்மையென்ற, வாய் மூலமாகத்தான் நீ உண்ணமுடியும்?

மற்றும், அந்த மண் மொரமைகள் மூலமாக, எதை எதை! எங்கெங்கு! எப்படி எப்படி! எவர்கள் உண்டாலும் அத்தும், நீ உண்டதுதானே?


இது என் சரீரம்! இது உன் சரீரம்! என்ற "பேதம்" ஏன்? இப்பேதம், மனோ பேதம் தானே?

சர்வ சரீரங்களையும், மண் மொரமையே, என மனதால் ஒன்றுபடுத்த வேண்டும். அங்கு வினை பலவாக இருந்தாலும், இயக்கம், மாயா & மனம் தானே! என அதையும், ஒன்றுபடுத்த வேண்டும். எனக்கு & என்றவ! என்ற மனோ பேதத்தை மட்டும், தள்ளிவிடு. அங்கு நீ, நீயாகவே! இருப்பாய்! நீயே, யாமாகவும்! இருக்கமுடியும். இந்நிலையில், உடல் உபாதை



அனைத்து சராசரங்களை
யும் மாயை (மண்) (45)
பொய்மையாக உன்
அறிவு உணர்ந்து விட்டால்
அன்பு மனம் இல்லாத்
தன்மையால் விகார
எண்ணமும்! விவகார
பிரச்சனைகளும் போதை
(களும்) அதை ஏற்க மனம்
இல்லாததால் போதை தோன்றும். மனதின்
சொந்தத்திலேயே போதை தோன்றுகிறது.

என்பது, எவருடையது? அது யாருக்கு? எவர்
அப்படி, அவஸ்தை என சொல்கிறார்? என
உள் ஆழ்ந்து கவனித்தால்? அதாவது சர்வார்
ப்பணம், அனுபவ நிலையில், உணர்ந்தால்; அது
**கண்ணா** மனதுடையது, என விளங்கும்.
அங்கு நீ; ஏமனமே! நீயோ மாயாவின்
மைந்தன்தானே? மாயா லோகம் முடைய (ஸ்ரீபக
வானுடைய) நிழல்தானே? அப்படியானால் எம்முன்
தோன்றிய நீ; ஏன் இப்படி ஆர்ப்பாட்டம் செய்
கிறாய்? உன் எழுச்சியால், இன்ப துன்பம்தானே
அடைகிறாய்? சற்று **அடங்கி** இருந்தால்
பொறுமையாக இருந்தால்
ஆனந்தம் அடையலாமே? இந்த உடைமை, உரிமை,
உனக்கேதற்கு? அது அறியா மாந்தர்களின்,
செய்கையாகும். ஆதலால் நீயோ, அறிவோடு
(ஸ்ரீபகவானோடு) கூடியவனாயிற்றே? சற்று பொறு



சற்று பொறு! சற்று பொறு! சற்று பொறு!
சகித்துக் கொள்! சகித்துக் கொள்! சகித்துக் கொள்!

பிறர் செய்வதையோ! பிறர் பேசுவதையோ!
பிறர் காரியங்களையோ! இகழ்ச்சியும் புகழ்ச்சியும்
நீ ஏன் கவனிக்கிறாய்? கொஞ்சம் விட்டுக்கொடு!
விட்டுக்கொடு! விட்டுக்கொடு! பொறுமையே
உன் சொரூபம்! பொறுமையே உன் சொரூபம்!


என, பொங்கி வரும் பாலில், சற்று ஜலம் தெளிப்பது போல், இரண்டு மூன்று முறை **சாந்தி**
செய்தால், மனம் உண்மையாகவே, சாந்தியாகும்!
அங்கு கள்ளமனம்! **நல்ல** மனமாகிவிடும்!

அங்கு மனம், மனமாக இராது. மனம் அறிவாகிவிடும்.
என எம் ஸ்ரீ அன்னை தம் அமுத வாக்கை முடித்துக் கொண்டாள்.
ஹே ராமா! ஹே திருவடி! ஹே சுகா! பெரிய சாதனை
ஒன்றுமில்லை. ரொம்ப சிறியதே! மிகமிக எளிதே!
திட்டமிட்ட காரியங்கள், திட்டமிட்டபடி, மண் பொம்மைகள்
ஆடிக்களிக்கின்றன! அதனை வினை ஆடிக்கழிக்கிறது!




வினைக் கூட்டுக்கும், நமக்கும், எந்த சம்பந்தமும்
இல்லை என்ற திட உணர்வுடன் (சர்வார்ப்பண
த்துடன்) இருந்து கொண்டு, பிரம்மாண்மயாவந்
யாகிய, பிரம்மார்ப்பணத்துடன், இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே! என்றறிவியர், கூவில் பேச்சை நிறை,
எதையும் எந்நிலையிலும், விட்டுக்கொடு! அமைதியாக
சகித்துக் கொள்! பொறுமையே கவசமாய், பொறுமையாயிரு!
நலம் பெறுவாய்
(சொல்அற சும்மா சுகமாயிரு)

**நாமரூபம்** வேண்டாம் என்றும்,
அதுவே நாம்! நாமே அது! என்ற பிரம்மபாவனை!
**ஒன்று** மட்டும் வேண்டும் என்றும்:
திரும்ப திரும்ப! திரும்ப திரும்ப! திரும்ப திரும்ப!
பக்கத்துக்குப் பக்கம்! பக்கத்துக்குப் பக்கம்!
ஸ்ரீமஹான்கள் சொல்வதை, சுட்டிக் காட்டி, அதிக
வலியுறுத்தி, சொல்கிறேன் ஏன் என்றால்?????



**நாமரூபத்தை** சொல்லும் போதும், சுட்டிக்காட்டும் போதும், தொட்டு உணர்த்தும் போதும், பொன் பொருள் ஜட சொரூபமாக இருந்தாலும், உறவு, சுற்றம், நட்பு, பாச சொரூபமாக இருந்தாலும், நாமரூபம் இடம் பெறும் போது, அது எத்தகையது என, அதன் **குணம்** சுட்டிக்காட்டப்பட்டு, குண தோஷம், பின்னிவிட்டு விடுகிறது. இக் குண தோஷ பின்னலே, புண்ணிய பாவமாக, இணைந்து, பிணைந்து, விடுகிறது! இதுவே ஜனனமரண விகாரமாகிறது. இந்த நாமரூபம், அனித்தையும், அறிவு ஊன்றி, உணர்ந்து நோக்கினால், எல்லாம் **மாயை** ஆகும். அம்மனுக்கு, அயலாக எதுவும் இல்லை யென்பதே சத்தியம். அம்மனை, செயல்படா நிலையிலும்; செயல்படுத்தா நிலையிலும்; வைத்து உணர்ந்தால், அம்மனை, வாக்கிய விளக்கமாகட்டும்





(49)


(மெய்க்கு ஒரு கோடிக்கும், பொய்யான விளக்கமாக)

அதை **பரமாக** வைத்துக் கொண்டால்,

(A) கண்ணால் காணக் கூடிய, மண்ணைக் கண்டாலும்;
அகில மண்ணாகிய பரத்திற்கு, நாம் அன்னியமில்லை!


(B) சூட்சும வடிவ ஸ்ரீ பகவானை, நம்மை உணர்ந்தாலும்,
நித்ய முக்தனாகிய ஸ்ரீ பகவான் பரத்திற்கு,
அன்னியமில்லாத் தன்மையிலே, அவனே நாம்!
நாமே அவன்! பரமே! அவனும், நாமும்!
இணைந்து பரமே நாம் என்பதும் லட்சியமாகும்

(உ) **அகண்ட** பேரொளி உணர்ந்தாலும்;
பரம் அகண்ட பேரொளி என்றும், ஸ்ரீ பகவான்
கண்ட பேரொளி என்றும்; **நாம்** அகண்ட
பேரொளியின், ஸ்வயமான **பொறி** என்பதும்,



இம்மூன்றும், இந்த தன்மையே, பரதந்த்ரவம்! என்ற நிலையால், அகண்ட/ பர/ தெய்வம் ஜீவ/ ஐக்கியம் ஆகி! அது அதுவாகவும், அதுவே நாமாகவும்! நாமே அதுவாகவும்! பிரகாசிப்பதால், நாம ரூப, குண, பேதம் வேண்டாம் என்றும், அதுவே நாம் நாமே அது! என்ற ஐக்கியம் வேண்டும் என்றும், தர்மஞானிகளால், உணர்த்தப்படுகிறது. இவ்வனுபவம் இயல்பாக கூட வேண்டும் என்றால்! பேச்சைக் குறை! எதையும் எந்நிலையிலும், விட்டுக்கொடு! எதையும் சகித்துக் கொள்! பொறுமையாய் இரு! சொல் அற சும்மா சுகமாயிரு! சொல்வதை செய்! செய்வதை செய்யாதே!

ஓர் குழந்தை:- ஹே பாபா ஜீ! குருவாக்காக இப்படி சொல்லப்படுகிறதே! அது உண்மையா? பொய்யா? அதாவது, குரு சொல்வதை, செய் என்றும், குரு செய்வதை, செய்யாதே என்றும்? சொல்லும் ரகசியம் என்ன?




51

வைத்தியம்:- ஹே ஸத்தான குழந்தாய்! இதில் குழம்புவதற்கு, என்ன இருக்கிறது? (குறும் சிரிப்பாக, சிரித்துக் கொண்டே) இவ்வாசகம், நன்மையாகத்தானே இருக்கிறது? இதில் உனக்கு என்ன சந்தேகம்?

குழந்தை:- தாங்கள்தானே பாபா! அடிக்கடி சொல்வீர்களே, குருவின் போதனையை விட! குருவின் சாதனைதான் முக்கியம். அதாவது, ஓர் குரு போதிப்பதை விட, அவர் வாழ்ந்து காட்டும், அனுபவமே, சிஷ்யாருக்கு, சாதனையாக அமையும்! என்பீர்களே! அதை அடிப்படையாகக் கொண்டு, இவ்வாசகத்தை, நோக்கும்போது, இதுவொரு நாதனாகத் தோன்றுகிறதே?

வைத்தியம்:- (சிரித்துக் கொண்டே) கொழுந்தே! நீ சொன்ன வாசகம், எவர் சொன்னது? அதன் அடிப்படையான, விளக்கமோ! ஓர் கதையோ! இருக்கத்தானே செய்யும்! அவ்விளக்கத்தை, இவ்வேளையே யோம், தெரிந்து கொள்ளலாமா? சற்று உன் மழலை மொழியில், சொல்பார்ப்போம், எனக் கேட்டோம்! (அக்குழந்தையின் வாயை கிண்டியே)




குழந்தை:- நல்ல வேடிக்கையானயாபா
நீங்கள்? எல்லாம் தெரிந்தும், தெரியாதது
போல், நடிக்கிறீர்கள். நீங்கள், நடிப்பில்
திறமைசாலிதான். பரவாயில்லை. அக்கதையை
சொல்கிறேன் :- ஒர் குருநாதர்! தம் சிஷ்
யர்கள், சிலருடன், பனிகள் அடர்ந்த பகுதியில்,
சென்று கொண்டிருந்தார். ஒர் இடத்தில் வந்ததும்,
ஒர் பானையில் **கள்** போன்ற கரும் மது
இருப்பதைக் கண்டார். எச்சலனமும் இன்றி,
அருகில் இருந்த, ஒர் சொம்பை எடுத்து, அக்கள்
என்ற மதுவை, மொண்டு குடித்துவிட்டு, அமைதி
யாகச் சென்று விட்டார்.

பின்னால் வந்த சிஷ்யர்களும், அங்கு
வந்து பார்த்தனர். அது மது என உணர்ந்தனர்.
நம் ஸ்ரீ குருநாதரே, **மது** அருந்துகிறாரே!
**நாம்** அருந்தினால், அது **தவறு** இல்லை
யென,



ஒருவருக்கு ஒருவர், பேசிக்கொண்டே, ஒவ்வொருவரும் **வேண்டிய** அளவு! அம்மதுவை அருந்தி விட்டு, ஸ்ரீ குருதேவர் பின்னால், சென்று கொண்டிருந்தனர்.

ஸ்ரீ குருதேவர், திரும்பிப் பார்த்து நிலைமையை, அறிந்து கொண்டார். சிரித்துக் கொண்டே சென்றார். வழியில் ஓர் கொல்வன்பட்டறை! இருந்தது. அங்கு ஓர், உருக்கு தாளியால், **ஈயத்தை உருக்கி** திராவகமாக வைக்கப்பட்டிருப்பதை, ஸ்ரீ குருதேவர் கண்டார். அங்கும், அருகில் கிடந்த, ஓர் பாத்திரத்தை எடுத்து, அத்திராவக ஈயத்தில், ஓர் பாத்திரம் நிறையமொண்டு, எச்சலனமும் இல்லாமல், ஆனந்தமாக, குடித்துவிட்டு சற்று ஒதுங்கிக் கொண்டார். ரிஷிகள், அருகில் வந்தனர். நிலைமையை அறிந்தனர். செய்வது அறியாது திகைத்தனர்.



ஸ்ரீ குருதேவர்:— குழந்தைகளே! இதையும் அருந்தலாமே? அம்மதுவை மட்டும், உண்பீர்களோ? இதையும் சாப்பிடலாமே என்றார்? அனைவரும், ஸ்ரீ குருதேவருக்கு, நமஸ்காரம் செய்து, **பிரபோ!** மன்னிக்க வேண்டும்! என வேண்டினார்கள். அப்போது தான், அந்த ஸ்ரீ குருதேவர் கூறிய, அறிவுரையே இது:—

**ஸ்ரீ குரு சொல்வதை செய்! செய்வதை செய்யாதே!**

எனக் கதையை முடித்தது அந்தக் குழந்தை!

வைத்தியம்:— ஆமாம் குழந்தாய்! கதையை சொல்லி விட்டாய். அதன் விளக்க கருத்தையும், அதில் உன் அனுபவத்தையும், சொல்லிவிடலாமே?

குழந்தை:— நல்ல கதை தான் பாபா! எம் வாயை கிண்டுவதிலேயே, கருத்தாக இருக்கிறேனே! ஏன் உங்கள் கருத்தை, சொல்லி விடக்கூடாதா?

வைத்தியம்:— அப்படியல்ல குழந்தாய்! நீ உணர்ந்த விதமென்ன என, சொல்லி விட்டால், இனிமேல் நீ **உணரும்** நிலையை, யாம் சொல்லலாமே?



உ

(55)

குழந்தை :- ஏன் இந்த வீண் வம்பு? யாமே, இதை
உணர்ந்த விதத்தை, சொல்லி விடுகிறோம்.
பின் உங்கள், முடிவை சொல்லுங்கள்? யாம்
சொல்லும், இக்கதை உணர்த்து வதாவது?

(1) ஸ்ரீகுருதேவர் சகல வல்லமையும் உடையவர்.
அவரால் முடியாதது, இவ்வுலகில் எதுவும் இல்லை!

**ஆகவே** (அவர் சொல்வதை மட்டும் செய்.
அவர் செய்வதை செய்யாதே! அது
உன்னால், செய்ய முடியாது!

என்பதை இக்கதை உணர்த்துகிறது!

(2) ஆன்மீகர்களுடைய, அனுபவ வாசகம்!

**ஸத்குரு** (வாக்கே உங்கள் வாழ்க்கை!
அவர் வாழ்ந்து காட்டும்
நடை!! உடை!! பாவனையே!!
உங்கள் சாதனையின் அனுபவம்.

ஹேபாபாஜீ! உங்கள் வாக்கையும், நாங்கள்
கடைப்பிடிக்கிறோம். ஆனால் சற்று கடினம்தான்.



56

உ

ஆனாலும், நாங்கள் கடைப்பிடித்து விடுவோம்.

இது உறுதி!

ஆன்றோர்களின், வாழ்க்கையின் அனுபவம்,

சாமான்யமானதல்ல! ஆனால் வெகு சுலபம்!

எளிமையிலும் எளிமை!
இனிமையிலும் இனிமை!
சுவையிலும் கருத்தொருமித்த சுவை!

வாழ்க்கையில், எப்படி வளர்ந்து! தெளிந்து!
பணணணணணணணணணணணணணணணணணணணணிந்து!
பொறுத்து! சகித்து! விட்டுக் கொடுத்து!
உன்ன (நான்! என்றல்! எனது!) அழித்து!
அன்பாய்! சொல்றேன்!!!

இதற்கு மேலும் எம்மால் எழுத முடியவில்லை!
சொல்லவும் முடியவில்லை. அதேயும், எங்கள்
சாதனையின் கருத்தாகும்!



உ




குழந்தை:- ஆனால் பாபா! அக்கதையில், அப்படி சொல்ல காரணம் என்ன? அதில் யாம், சொன்ன கருத்து சரிதானா?

வைத்தியம்:- அன்பான கொழுந்தே! உன் கருத்து! 100/100 சரிதான்! ஆனால் அது, ஸத்குரு வாக்கல்ல! அது சக்தி குருவின் வாக்கு ஆகும். ஆகவே சக்தி குருவின், அசகாய சூர சக்திகளை எல்லோராலும் ஏற்கவும் முடியாது! அதன்படி நடக்கவும் முடியாது!

அவர்கள் { வேத வேதாந்த கருத்துக்களை, போதிப்பார்கள். அவர்கள் நடக்க முடியாது! நடக்கவியலாது. யோக ஸித்தியால் தான், அபூர்வ சக்திகளை, நடத்து காட்டுவார்கள் அது அனைவராலும், கடைப்பிடித்து நடக்க முடியாது!

குறிப்பாக இதை மட்டும் உணர்:- ஓர் ஸ்ரீமானின் மது அருந்து வாரா? காய்ச்சிய ஈயத்தை குடிப்பது என்பது, மனித சக்திக்கும், அப்பாற் பட்ட ஓர் சக்தியின் காரியமாகும்.



இவ்வுலகில், மனதின் கவர்ச்சி பொரு ஆகும். (மனதை மயக்குவதாகும்) தன்னை அறியும் அறிவாகிய, ஆத்ம ஞானத்திற்கு, இது பொருந்தாததாகும்.

ஓர் குருவானவர், தாம் சாதித்ததையே, போதிக்க வேண்டும். போதனை சாதனை ஆகாது. ஆனால் இந்த கலியுகத்திற்கு, இது பொருந்தாதுதான். இந்த ஞான பரதேசியிடம், நடந்த ஓர், சம்பவத்தை சுட்டிக்காட்டுகிறேன். உணர்க. திருமந்திர நகரில், யாம் இருக்கும் போது, சிலர் வந்து, பாடம் கேட்டும் செல்வர். சிலர் பாடம் கொடுத்தும் போவர்.

குழந்தை:- அது என்ன பாபா! பாடம் கேட்டும் போவர் என்றால் இது சரி. பாடம் கொடுத்தும் போவர் என்றால் இதை எம்மால், புரிந்து கொள்ள முடியவில்லையே!

வைத்தியம்:- குழந்தாய்! இந்த ஞானம் போதும், ஓர் அடியனே! குரு இல்லவே இல்லை! ஆகவே உன் போன்று, வருபவர்களிடம் தான் பெருமையின் பாடம், யாம் பெற முடியும்!




(59)

இவரிடம் இருக்கும் தீவினையானது தீயபழக்க வழக்கங்களை உண்டுபண்ணும் நிலைகண்டு யாம் அதை விலக்க முடியும். நிலைகண்டு வேறு இல்லாமல் விலக்க வைக்கவும் முடியும். அது ஓர் நாடகமாய் நடைபெறும்.


குழந்தை :— சரி சரி! அதைப்பற்றி, அப்புறம் தெரிந்து கொள்கிறேன். ஏதோ ஓர் சம்பவம்பற்றி, சொல்ல வந்தீர்களே? அதை சொல்லுங்கள், பார்ப்போம்?

வைத்தியம் :— குழந்தாய்! அப்படி பாடம் கேட்க வரும், அன்பர்களில், ஓர் திருமணம் ஆகாத, இளைஞனும் உண்டு. அவன் ரொம்ப ரொம்ப, சிரத்தையோடு கூடியவனும். உள்ள உருக்கம், கண்ணீர் பெருக்கம், அப்படியே நடக்கவேணுமென்ற, ஆர்வம் உடையவனாக இருப்பான். ஆனால் அவனிடம் உலக நியதியால் தீயது என்பார்கள். அதாவது புகை பிடிக்கும் பழக்கம், இருந்தது போலும்? நாள் ஒன்றுக்கு, 5 or 6 பாக்கட், சிகரட் ஊதி தள்ளி விடுவானாம். ½ மணி நேரம், அவனால் ஓர் இடத்தில் இருக்க முடியாது. வெளியே போவது போல் போய் தம் காரியத்தை முடித்து விடுவான். இது அவன் பிராரப்த கர்மா போலும்! இதை யாரும் அறிவோம். ஆனால் அதை, கண்டிக்கவும் இல்லை! கண்டு கொள்ளவும் இல்லை! ஆனால் சாட்சியாக, கண்காணிப்போம்.




அவன் அருளால், ஓர் காலம் கனியும்போது;
அது அதனைதன், பிரபஞ்சத்தின் பழைமை அமையும்.
இயற்கைக்கு மாறுகளையும் செய்யோம்!
இயற்கைக்கு, பணிந்து, பணிந்து, கொடுப்போம்!!
நேரடியாக, புகுந்து விளையாடவும் மாட்டோம்!
எல்லாம் அவனே இருப்பதனையும், அவனே யாமாகவும்,
யாமே அவனையும், இருப்பதை, ஆங்காங்கு வெவ்வேறு நாமரூபங்களை கொண்டு, சமயம்
கண்டு, திருத்தவோ! நிறுத்தவோ! அவன் அருளால்
முடியும். யாம் ஓர் பதுமையாகவே, செயல்படா
நிலையில்! செயல் படுத்தக் கொண்டிருப்போம்.

காலம் கடந்து, சென்று கொண்டிருந்தது.
அவனுக்கு அந்த காலமும், நெருங்கி வந்து விட்டது.
ஓர் நாள், ஓர் காரியார்த்தமாக, அவன் நாகர்கோயில்
செல்ல வேண்டிய, சூழ்நிலை தானே உருவானது!



அவன் நாகர்கோயில் சென்றான். ஓர் ஆறு தினம்,
அவன் அங்கு தங்க வேண்டியதாயிற்று.
அதுசமயம், அருகில் உள்ள ஓர் மலை அடிவாரத்தில்,
ஓர் சாது இருப்பதாக, கேள்விப்பட்டு, அங்கு
சென்று, அந்த ஸ்ரீமஹானை, தரிசித்திருக்கிறான்.
ஆறு தினங்களும், மாலை ஸத்ஸங்கத்தில், கலந்து
கொள்வானாம்.

இவனுடைய ஆர்வம்! ஆழமான கேள்வி!
நுட்பமாக கிரஹிப்பது! இவைகளை, அந்த ஸ்ரீமஹான்
கண்டு, ஆனந்தம் கொண்டார் போலும்! அச்சமயம்
ஸங்க காலங்களில், இருமுறையாவது வெளியில்
சென்று, இரண்டொரு நிமிஷங்களில், தம் காரியத்தை
(புகைபிடிக்கல்) முடித்து விட்டு வந்து, ஒன்றும்
அறியாதவன் போல, அமர்ந்து விடுவானாம். கடைசி
நாள், ஸத்ஸங்கம் முடிந்தவுடன், அவனை அந்த
ஸ்ரீமஹான், தம் அருகில் அழைத்து, வைத்துக்
கொண்டு, அவனிடம் பற்றியும்! இந்த ஆசையைப்



பற்றியும், அவன் நடை, உடை, பாவனையைப் பற்றியும், தெரிந்து கொண்டார். கடைசியாக, அவன் உதட்டையும் கவனிக்கிறார். அவன் வாயில் இருந்து வரும், வாசனையையும் கவனிக்கிறார்

ஸ்ரீ மஹான் :- குழந்தாய்! உனக்கு ஸ்மோக்கிங் (புகைக்கும்) (சிகரெட் குடிக்கும் பழக்கம்) உண்டோ?

அக்குழந்தை :- (ஒன்றும் பேச முடியாமல் திணறி திகைக்கிறான்) ஆமாம் ஸ்வாமி ஜீ!

ஸ்ரீ மஹான் :- அப்பழக்கம், உனக்கு எத்தனை காலமாக, உள்ளது?

அக்குழந்தை :- சுமார் 2 வருடங்களாக இதை விட முயற்சிக்கிறேன். ஆனால் விடமுடிய வில்லை!

ஸ்ரீ மஹான் :- உன்னுடைய, ஸ்ரீ குருதேவரின் பரிச்சயம், எவ்வளவு காலம் இருக்கிறது?

அக்குழந்தை :- சுமார் 8 வருடங்கள் இருக்கலாம். அவர் அன்பே வடிவானவர்.



உ


63

ஸ்ரீமஹான்:— இந்த எட்டு வருஷங்களாக, இக்காரியத்தை, அவர் கண்டு கொள்ளவில்லையா? இல்லை, கண்டும் காணாமல் இருக்கிறாரா?

அத்துஷ்டனுக்கு — அவர் ஸத்ஸங்க காலங்களில், பொதுவாக, ஒழுக்கத்தைப் பற்றிதான், பாடம் நடத்துவார். தீமை பழக்க வழக்கம், தீய நட்பு, கூடாதென்பார். ஆனால் எவரையும், இப்படி செய்யாதே என்றோ, இப்படி பேசாதே என்றோ, குறிப்பிட்டு சொன்னதே இல்லை.

ஸ்ரீமஹான்:— அப்படியா, பரவாயில்லையே, அப்படியும் ஒருவர் இருக்கிறாரா? நீ ஐந்து பாக்கெட் ஊதித் தள்ளுபவனாக, இருக்கும் பக்ஷத்தில், உன் ஸ்ரீ குருதேவர், பத்து பாக்கெட், ஊதுபவராகத்தான் இருக்க வேண்டும், இருக்க முடியும்!! நல்ல குரு, நல்ல சீடன், எனச்சொன்னார் போலும்?






அதற்கு மேலும், அவனால் அங்கு இருக்க முடியவில்லை போலும்?  என்கதறி, அழுது கொண்டு, வெளியே ஓடி வந்திருக்கிறான். அவர் மவுனமாக சிரித்துக் கொண்டே தம்பி! தம்பி! தம்பி! என அழைக்கும் குரல் மட்டும், அவன் காதில், விழுந்ததாம்! அன்றும், சாப்பிடவில்லை! தூங்க முடியவில்லை! மறுநாள், காரியாலயம் செல்லவும் முடியவில்லை! எப்படியோ ஸ்ரீ பகவான் எவர் மூலமாகவோ, காரியத்தை, அன்று மாலை அறுப்பட்டு, முடித்துக் கொடுக்க, இந்த ஏழை வைத்தியம், இரவு 10 மணிக்கு மேல், இருப்பிடத்தை அடைந்து, அந்த வைத்தியத்தின் பாதங்களை, பற்றிக் கொண்டு, அவன் அடைந்த நிலையை, எழுத முடியவில்லை!

அன்றுடன், அக்குழந்தையின், தீய பழக்க வழக்கம் அனைத்தும் சர்வநாசமாயின.

குழந்தாய்! இந்த ஏழை வைத்தியம், ஏதும் அறியாதுதான்! ஆனாலும், எல்லாம் அறிந்தவன்! எல்லாம் உணர்ந்தவன்! உடன் இருப்பதால் (அவனே யானாய்! யானே அவனாய்) கண்டிப்பு! தண்டிப்பு! கண்காணிப்பு! இல்லாதது போல் தெரியும். ஆனால், ஆங்காங்கு, பலபல நாம ரூபங்களுடன் செயல்படுவோம் (அவன் நிழலில்) இது அந்தரங்கமாக இருக்கும்.



(65)

உங்கள் அன்பரின் மீக்குசாரம் (கயிறு) எம் (கண்ணன்) கைவசம் தான் இருக்கிறது. உங்கள் விருப்பப்படி சற்று தாக்கி, விட்டு நான் பிடிப்போம். (வினை எட்ட மட்டும், விடுவோம்) நூல் கண்டு, (கேட்டு) மேல் இது, செல்லவாகாது! சென்றால், வினை முடிச்சு விழும். என்று நில் அறிந்தால்) சற்றும், தாமதியாது, உடனே ஓர் சுண்டு சுண்டி இழுப்போம்! (அதுசமயம், தாவ உபாயம், மனை வழியில்! கொஞ்சம் அன்பு மிக்க தான் செய்யும். சற்று இறை குரு உணர்வுடன், பொறுக்கவும், சகிக்கவும், விட்டுக் கொடுக்கவும் பேச்சை குறைக்கவும் பழகிக் கொள்ளுங்கள். வேறு வழி இல்லை என்றால் பின் அபயகரம் கொண்டு உங்களை எம்மோடு, (சேர்ப்போம்) இணைத்து, அணைப்போம்! இதுவே எம் காரியம்.



# சிவரகஸ்யம்

ஓம் அன்பான, ஆத்மானந்தக் குழந்தைகளே!
ஸ்ரீசிவபெருமான், நாமரூப சூட்சும வடிவமான
தெய்வம் ஆகிறார்.
ஸ்ரீதட்சிணாமூர்த்தி **சிவம்(பரம்)** அம்ச
ஸ்ரீஸத்குரு ஆகிறார்.
ஸ்ரீதட்சிணாமூர்த்தி பார்வதிதேவிக்கு,
இரண்டு இடங்களில், வைத்து **தத்துவ**
(தத்பத, த்வம்பத = பரமாத்மா & ஜீவாத்மா) விளக்கம்
கொடுப்பதாக, கதையில் பேசப்படுகிறது.

ஓர்சமயம், திருமந்திர நகர் என்ற, ஊரில் கடல்
கரைப் பகுதியான, சங்குமுகம் என்ற இடத்தில்,
**பூவரசு** (பூலோக அரசு) என்ற, ஓர் மரத்தின்
கீழ் அமர்ந்து, இரவு 12 மணிக்கு மேல், உபதேசம்
செய்ததாக, ஸ்ரீ மஹான்களால் பேசப்படுகிறது.

ஓர் சமயம், ஓர் தனிமரமான (ஆலமரத்தின்)
இடத்தில் கீழ், அமர்ந்த நிலையில், இரவு 12 மணிக்கு
மேல், உபதேசம் செய்ததாக ஸ்ரீமஹான்களால்
பேசப்படுகிறது.




உ



கடல் கரை பகுதியான, சங்கு முகத்தில்,
எம்பெருமான் உபதேசம், செய்யும்போது, ஓர்
**மீன்** அதை கேட்டதாகவும் அவ்வுபதேச
கருத்தால், அம்மீன் **மச்சேந்திர**
**நாதர்** என்ற, நாமதேயத்துடன், ஓர்
**ஸித்த** புருஷராக (அஷ்டஸித்தியும் கற்றதாக)
அவதரித்தார் என்று, பேசப்படுகிறது.

ஓர் ஆலமரத்தடியில், எம்பெருமான்,
உபதேசம் செய்யும்போது, ஓர் **கிளி**
அதைக் கேட்டதாகவும், அவ்வுபதேச கருத்தால்,
அக்கிளி **சுகப்பிரம்மம்** என்ற
ஓர் அவதூத ஆத்மஞானியாக திகழ்ந்தார்
என்றும், பேசப்படுகிறது.
சுகப்பிரம்மம் என்பது:- **திடஞானி** ஆகும்!



இவ்விரு விஷயங்களைப் பற்றியும், பலகாலம்
எண்ணிப் பார்த்தேன் எப்படி என்றால்?


உபதேசம் செய்தவரோ, தக்ஷிணாமூர்த்தி!

ஆகிய ஸத்குருதேவர் ஒருவரே, இருஇடத்திலும்
உபதேசித்திருக்கிறார்.
அங்கு உபதேசம் கேட்டவரோ, ஸ்ரீ அன்னையாகிய
உமாமஹேஸ்வரி!

அவ்விரு இடத்திலும், மறைமுகமாக, இருவர்
(மீன் & கிளி) அதைக் கிரஹித்தனர். அதில்
ஒருவர் ஸித்தர் ஆகவும், ஒருவர் ஆத்ம ஞானியாகவும்,

தோன்றக் காரணம் என்ன?
அங்கு **உபதேசம்** மாறுபட்டதா?
அல்லது, உபதேசம் கிரஹித்தவர்களில், ஒருவர்
வனவாசியாகவும், ஒருவர் ஜலவாசியாகவும்,
இருந்ததால், உபதேசக் கருத்து மாறுபட்டதா?
ஆனால் கருத்து மாறுபடக் காரணம் இல்லையே?





என இவ் விஷயத்தில், சற்று குழப்பமாகவே
இருந்தது. இந்த நிவர்த்தியை, **அதுவே**
செய்யட்டும் என, அந்த எண்ண விருத்தியை,
பலகாலம் விட்டது. சில சமயம், அவ் வெண்ணம்
வந்து ஊடாடும்! ஆனால் அதை, வசதியம் செய்
வதில்லை. **15** தேதி வெள்ளி இரவு, படுக்கும் போது,
அவ் வெண்ணம் வந்தது. ஸித்தனோ? ஞானியோ?
எல்லாம் **ஒன்றே** அது **சுகமே!** என
அமைதி கொண்டது அறிவு! **16** தேதி சனி அதிகாலை,
**ஒருமணி** அளவில், ஓர் கணீர்குரலில்,
ஆனந்தம் ஊட்டும்குரலில்! அதிஅதிமதுரம்குரலில்,
**சுகா! சுகா!** என இருமுறை ஒலித்தது.
இப்பைத்தியம், அம்மடியே, எழுந்த வண்ணம்
இருக்கையில் அமர்ந்த வண்ணம், குரல் வந்த
திசையை, நோக்கியது. திவ்விய தேஜஸான,



உ

ஓர் 16 வயதுடையவன், எந்த ஆடை அணிகளும் இன்றி, பிறந்த மேனியார்! அவ்வாயம் கேசங்கள், முழங்கால்வரை தொங்கிய நிலையில், அதுவே ஆடையாய் அமைய, கிளி மூகாரவிந்தத்துடனும்! ஒளியான கண்கள்! கொவ்வைப் பழம்போல், செக்கச் சிவந்த வாய் (கிளி வாய் என்றுவே, நாவற் பழத்தை, கொத்தி கிழித்து, ரஸத்தை சுவைக்கும், வினோவான வாய்) மேலும் எழுத வாயும் இல்லை! வதனமும் தோற்றவில்லை!

கொள்ளா அழகு

அவ்வளவுதான் சொல்ல முடியும். அவ்வளவுதான் எழுதவும் முடியும். இவ்வேளையை மன்னிக்கவும். ஓர் இவ்வயதுடையவன், குறும் சிரிப்புடன்;



உ

# சுகா! நலம். நலமே என்றான்.

இரண்டொரு வினாடிகளில், வந்தது யார் என,
உணர்ந்தது இவ்வேழை வைத்தியம்.
வைத்தியம்:- ஹே பிரபோ! தாங்களா! இவ்
வேழையை, தேடி நாடி வந்தது? பெரும்பாக்கியம்
செய்திருக்கிறது! ஆமாம்! சுகா! சுகா! என
அழைக்கும் ஒலி கேட்டதே! தாங்களைத்
தாங்களே, அழைத்தீர்களா?
சுகர்:- கவகவகவகவகவ கல கல கல கவ வென
மணி ஓசை போல், குலுங்கச் சிரித்துக் கொண்டே
ஆமாம்! எம்மை! யாமே! அழைத்தோம். புரியவில்லையா
ஒரு இருவர் இல்லையே! **யாம்/நீ/ஒருவர்** இருவரும் தானே?
எம் அம்சத்தை, எம் நாமாவால் அழைப்பது, ஏன்
பொருந்தாது?
வைத்தியம்:- பராபரக்கண்ணியில், எம் தாயுமானவர்
அழகாகச் சொன்னார். அது அப்படியே தாங்களுக்குத்
தான் பொருந்தும். அப்பாடவாவது?
அங்ஙமே நின் வடிவமான சுகர் கூப்பிட
(சுகரை சுகா என, அவர் தந்தை வியாசர் அழைக்க)
எங்குமே ஏன்? ஏன்? என்றது என்னே பராபரமே! **நீ** என்றார்.



இடம் பொருள் அறிந்து அது உணர்த்த வந்தது! வந்தே ஆக வேண்டும்!

எண்ணியதை (72)
எண்ணியவாறு
எமக்கு அளிக்கும்
தெய்வம். என்று
மகான்கள் சொல்வர்
அந்நிலையில் எம் எண்
ணம் அறிந்து காலம்

சுகர்:- ஆமாம் சுகா! அப்படி உருகி அழைத்தது!

உன் தந்தையும்! எம் தந்தையுமான

வியாச பகவானும்.

வைத்தியம்:- சரி! சரி! கதை வேண்டாம்! நம் கருத்துக்கு வருவோம். இவ்வேளையை, நாடி வந்த காரணம் என்ன?

சுகர்:- பலகாலமாக, உன் அறிவு பூர்வமாகவே, ஓர் கேள்வி எழுகிறது. அதை யாம் உணர்வோம். அதை தெளிவுபடுத்தவே, இங்கு வந்தோம்.

வைத்தியம்:- அப்படியானால் தெளிவுபடுத்தலாமே?

சுகர்:- அக்கவக்கம், கேள்வியாக வெளிவரலாமே?

வைத்தியம்:- அது தெரிந்துதானே, தாங்கள் இங்கு வந்துள்ளீர்கள்? பின் கேள்வி எதற்கு?

சுகர்:- கேள்வி? தெளிவு நிலையால், ஸ்பஷ்டமாக இருந்தாலும், விடை வேண்டுமானால், அக் கேள்வியை சொன்னால்தானே, விடை கிடைக்கும்?

வைத்தியம்:- எப்படியோ ஒன்று! வாக்கை வரவழைத்துதான், வாக்கு கொடுக்க வேண்டும் என்ற நியதி! அதை தாங்கள் விடவா போகிறீர்கள்?



கலை என்றால் (73)
வித்தை!
வித்தை என்றால் அறிவு
எனவும் பொருள்படும்.
ஆனால் ஆத்ம வித்தை
ஒன்றைத்தவிர மற்றும்
15 கலைகளும் சக்தி
ஸித்திநிலைகளாகும். ஆத்ம வித்தை
ஒன்றே ஜீவன் முக்தி ஆகும்.

வைத்தியம் :- ஸ்ரீ ஸத்குரு தயாநிதி ஸ்ரீத்தியிடம்,
தாங்கள்! கிளிவடி வாழும்; மச்சேந்திரர்! மீன்!
வடிவாழும்; இருந்து இருநிலைகளில்; இருஇடங்
களில்; ஸ்ரீ அன்னையிடம், நடத்திய பாடத்தை,
கேட்டதாக, ஓர் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அதை
கேட்டநீங்கள், இருவரில் ஒருவர் **யோக**
ஸித்தியும்! ஒருவர் **ஆத்மஞானமும்**
பெற்றதாக, ஸ்ரீ அன்பர்கள் மூலமாக, அறிகிறோம்.
இவ்வாறான அனுபவத்தில், **மாறு** பாடும்!
**வேறு** பாடும்! இருப்பதாக தோன்றுகிறது!

இதன் காரணம் :- **பாட** விளக்கமா? **உருவ**
வேற்றுமையா? என்பதே கேள்வியாகும்?
ஆனால் ஸத்குருவின் பாடம் ஒன்றே! ஆனால் நிலை!
**கலை** கண்டு மாறலாம். அப்படி ஒ.பேதமும்,
உண்டா என்பதே கேள்வி!
நிலை என்றால் அனுபவம்! கலைஎன்றால் வித்தையின்
ஆதாரம்!





இப்படி நாங்கள் இருவரும், விளக்கம் கேட்டு
டுக்கொண்டிருக்கும்போதே, எம்பிரான்!

**ஸ்ரீதக்ஷிணா மூர்த்தி** அவர்
ப்ரத்யக்ஷமானார். (வந்தவர் உடனே)

என்ன குழந்தாய் பாமா! எம் செல்வமே சுகா!
எவருக்குமே உதவாத! உதவ முடியாதவன் நானா!
ப்ராணத்யாகம் பண்ணுகிறதே? ஏதேனும் விசேஷம்
உண்டா?

வைக்கியம்:- ஹே ஸத்குரு தேவா! ஸத்குருநாதா!
இந்த இடம் நாடி, தேடி வந்ததே, விசேஷம் தான்!
பெரும் பாக்கியம் பெற்றோம். ஆமாம் தேவா!
வந்ததும், வராததுமாக, தாங்கள், உதவாத!
உதவமுடியாதவன் என, அறிமுகப்படுத்திக்
கொண்டே வருகிறீர்களே! அதன் பொருள்,
இவ்வைராக்கியம், தெரிந்து கொள்ளலாமா?

ஸத்குரு:- ஓஹோ! அவசியம் தெரிந்துதான்
ஆகவேண்டுமா? நீ மாத்திரம் என்னவாம்?
உன்னை ஓர் உதவாக்கரை என புகழ்ந்துகொண்டு
திரிகிறாயே?



உ

ஸத்குரு :- யாம்மட்டும் உதவாத உதவ
முடியாதவன் என, சொல்லக்கூடாதா?
நாமரூப, ஜகத், ஜீவ! தோற்றங்களுக்கு,
உதவாத! உதவ முடியாத! உன் உதவாக்கறையும்!
ஆறாவ் ஆத்ம ஞானத்திற்கு மட்டும்!
உதவ அக்கறையோடு கூடியவன்! என்பது
தானே? உன் கருத்தும்! எம் பொருளுமாகும்!
சரி இந்த, வார்த்தையின் மாயா ஜாலம், நம்
இருவருக்குமே வேண்டாம். இங்கு என்ன கருத்து
பரிமாற்றம்???

சுகர் :- ஹே பிரபோ! முன் சம்பவங்களை
விளக்கிக் காட்டிவிட்டு, மகேந்திரருக்கு
சொன்ன கருத்தும்! எமக்குச் சொன்ன கருத்தும்!
ஒன்றா? இரண்டா?? இருகாளி



அகர்:—

இப்போதைய கேள்வி! இதைத்தான் எம்மிடமும் கேட்டான்! தாங்களிடம் கேட்கிறேன்? இதைப் புரியாமல் எப்படி சொல்ல முடியும்?

யாம் வாழ்ந்து, பாடம் பெற்றது துவாபரயுகம்!

மச்சேந்திரர் பாடம் பெற்றது, கலியுகம்!!!

பலபல ஆயிரம் வருடங்கள் முன்பான் அமைந்தது. ஆனால் இந்த, பாபா என்னும்

“வல்லாழகண்டன்!”

வலிமையான திறமை, படைத்தவன் ஆனால் ஸத்யம் தவிர, ஒன்றுமே அறியாதவன்!

ஈஸ்வர சிருஷ்டிக்கும், அப்பால் இருந்து கொண்டு, தம்மைதாமே இத்துடன், 7 முறை தோற்றுவித்தவன். ஒன்றுமே, அறியாதவன் போல் நடிக்கிறான். ஆனால் அவன் நடிப்பும், பணிவே பாதையாகக் கொண்டும்! பொறுமையே கவசமாகக் கொண்டும்! ஒழுக்கமே யோகினியாகக் கொண்டும்! சுத்த அத்வைதத்தையே, தம் வசியமாகக் கொண்டும்!



இருப்பதால், இவன் பெருமையை, எவராலும் அறிய முடியாது என்று சொல்லிக் கொண்டே, அந்த வைத்தியக்கார பாபாவை, தேடினார்கள் போலும்? அப்பாபாவை காணவில்லை. அவ் வைத்தியம், தரையில் படுத்தவண்ணம், ஸ்ரீ ஸத்குரு தக்ஷிணாமூர்த்தியின் திருவடிகளை, அவலம்பியபின், தம் கொடீணத்தை, அவிழ்த்து, அப்பொற் பாதங்களை, துடைத்து கண் அருவி பெருக்கெடுத்து ஓட, அஞ்சலிஹஸ்தராய், அண்ணாந்த நிலையில், இருவரையும் பார்த்து, பேச நாவு எழாமல், தழுதழுத்த குரலில்;

ஹேமஹாத்மாக்களே!

நீங்கள் எங்கே?

இந்த ஏழை பரதேசி எங்கே? மலை எங்கே? மடு எங்கே? அகண்டம் எங்கே? ஓர் தூசி எங்கே? பரீக்ஷிப்பதிலும், ஓர் அளவு உண்டு! உங்கள் பரீக்ஷைக்கு, இந்த ஏழை வைத்தியம் தகுதி ஆகாது? போதும் ஐயா! விளையாட்டு போதும்! என கெஞ்சிய வண்ணம்.



உ

(78)

தாங்கள், வந்த காரணத்தை மட்டும் முடித்து விட்டுச் செல்லுங்கள். எனப் பணிவாகவும், கனிவாகவும் கூறியது!

ஸத்குரு:- ஹே பரம பாகவதோத்தம பாபாவே! நீயோ பணிந்து விடுகிறாய்! அங்கு நாங்கள், எங்கள் பணியை செய்கிறோம். அவ்வளவுதான்!


சுகர்:- ஹே பணிவான பாபாவே! எழுந்திரு என கைவாகு கொடுத்து, அப்பைத்தியத்தை, தூக்கி நிறுத்துகிறார் சுகர். (பின் ஸ்ரீ ஸத்குருவைப்பார்த்து) ஹே குருதேவா! இப்போது நாங்கள். இதில் பணிந்தவர் என்று சொல்லுங்கள்? பார்ப்போம்! என்றார் எம் அன்பான சுகப்பிரம்மம்.

ஸத்குரு:- ஆகா ஆகா! பேஷ் பேஷ்! இரண்டும் சுகப்பிரம்மமே! இங்கு எந்த வேற்றுமையும் இல்லை! (இவ்விரு அடிகள் இருவரும் கிளி முகத்துடன், ஒரே அம்சமாக தோற்றினார் போலும்? மறுகணம் மாறினார் போலும்?) ஓம் அருமை திருவடி!





இனி உன் கேள்விக்கு, விடை பகர்கிறேன்.
கவனமாக கேள்:- துவாபர யுக கடைசி,
கிளிஅம்ஸ சுகப்பிரம்மத்திற்கு, யாம்
எம் தேவியை ஓர் **காப்பொரு
ளாக** வைத்துக் கொண்டு யாம் உபதேசித்தது (காரணமாக)
**சிவரகஸ்யம்** என்றும், வேதாந்த
சுத்த அத்வைத சுருக்கமாகும். இதையே, திரேதா
யுக ஆரம்பத்தில், பிரம்மாவின் மானஸ புத்
திரன் **ரிபு**வுக்கு, உபதேசம் செய்தோம்.
அதுவே, நீ எங்கெங்கு, உன்னை தோற்று வித்துக்
கொண்டாயோ அங்கங்கெல்லாம், உன்
பாணியில் **ஸ்வயஞானுப
வம்** என்ற நாமத்தில் விளங்கியபடி இருக்கிறது.
கலியுக பாதியில், மீன் அம்ஸ, மச்சேந்திரனுக்கு,
யாம் எம் தேவியை முகப்பொருளாய்
வைத்துக் கொண்டு யாம் உபதேசம் செய்தது.
**அஷ்டாங்கயோகம்** ஆகும்.



(80)

அஷ்டாங்க யோகம் என்றால், எட்டு அங்கங்களை கொண்ட யோகம்! எனவொன்றாகும். இதை சிரத்தையுடன், குருமூலமாக, ஒருவன் பயிற்சி செய்வானேயானால் அவனுக்கு,

**அஷ்டாஸித்திகளும்** கைகூடும்.

வைத்தியம்:- இத்தோர்வையே, வெகுகாலமாக, தெளிவு பெறாமல் இருந்தது. இன்று தாங்கள் கிருபையால், தெளிவு பெற்றது.

சுகர்:- ஹே மாமா! சுகமாமா! சிவரகசியம் பற்றியாம், வியாசசூத்திரத்தை, திரு அவதாரம் செய்த சமயம், உன் ஆறாவது தோற்றத்தில் (சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்) **கேதாரநாதில்** வைத்து, உரையாடி பகிர்ந்து கொண்டோமே அது பற்றிய, விளக்கத்தை, இப்போது கேட்டுத்தெரிந்து கொள்ளலாமே? இது நல்ல சந்தர்ப்பம்! நீ கேட்கிறாயா? யாம் கேட்கட்டுமா?

வைத்தியம்:- இந்த ஆசையே கேட்டுவிடுகிறது?





தேவ தெய்வங்கள் தாம் செய்யும் மாயா வையும்! மாயா கார்யங்களையும் விட்டால் தான் சாட்சி பாவனையை விட்டு சர்வ சாட்சி பாவனைக்கு வர முடியும். அப்படி சர்வ சாட்சி நிலை பெறுபவர்கள் தான் ஸத்குரு நிலை பெற முடியும்.

ஸத்குரு :– என்ன விஷயம் திருவடி? நீங்கள் இருவருமே, பேசிக் கொள்கிறீர்கள்? அந்த கேள்வி என்ன?

வைத்தியம் :– ஹே ஸத்குருவார்யா! ஸத்திய சொரூபா! கேள்வி வேறொன்றுமில்லை. சிவரகஸ்யம் என்பது பர ரகஸ்யமா? குரு ரகஸ்யமா?

ஸத்குரு :– இது நல்ல கேள்வி தான்? ஸத்குருவே! பர குரு ஆவார்! பரமே தான் ஸத்குருவாக வர முடியும்! பர இயலும். ஆனால் தேவ தெய்வங்கள் பர குரு என்ற, ஸத்குரு ஆக முடியாது. அத் தேவ தெய்வங்களும், தம் சாட்சி பாவனையை விட்டு, சர்வசாட்சி பாவனையில் (அகண்ட பாவனையில்) ஸ்வய அனுபவம், பெறும் போது தான், அவர்களும் பர நிலை என்ற, பர கருணையை பெற முடியும். அப்போது தான், அவர்கள் ஸத்குரு ஆக முடியும். ஸத்குரு என்றுமே, எந்த விதமும் ஸத்தியத்தில் நிலை பெற்றவராய், இருக்க வேண்டும். அங்கு அந்த



(௮௨)

ஸத்குருவுக்கு
மாயா தேவை இல்லை.
ஆனால் ஸ்ரீபகவான் தேவை.
ஸ்ரீபகவான் அறிவு சொரூபம்
ஸத்குருவோ அறிவு சொரூபம்
ஆகவே பேரறிவுடன்
அறிவு இணைந்தே ஆக
வேண்டும். ஸத்குருவின் காரிய
மான ஜீவ அழிப்புக்கு ஸ்ரீபகவான் உதவி
யுடன் தான் அக்காரியம் செய்ய முடியும்.

ஸத்குருவுக்கு, எந்த இயக்கமும், இருக்க முடியாது!
இருக்க இயலாது. மாயா அவர்களுக்குத்
தேவையில்லை. ஆனால், ஜீவ அழிப்பின் நிமித்தம்
மாயாவை உடைய ஸ்ரீபகவான், அவர்
கருத்து, உபகாரியாய் இருந்து கொண்டு, இயக்கத்
தை, நடத்துவான். அதை மனக்கண் கொண்டு,
பார்ப்பவர்களுக்கு, ஸத்குருவே அனைத்து காரியங்
களையும், செய்கிறார் என்று, நம்ப வேண்டும்.
(நம்பித்தான் ஆக வேண்டும்)
பந்தப் பட்டவன் ஜீவன்! எதிலும்
சம்பந்தம் இல்லாதிருப்பது பரம்!! ஆனால்,
இவ்விரண்டையும், இணைப்பதில் பங்கு கொண்டது போல்
நடிப்பது மாயாவை உடைய, ஸ்ரீபகவான் என்ற ஈசன்
ஆனால் இன்றைய, கலியுக அத்வைதிகள், ஸ்ரீபகவானை



# சிவம் (83)

என்றுவ் **பரம்!**

ஏதற்கு எட்டாதது என்றே எட்டும் நிலைக்கு சிவ மறை பொருளை உரைத்து அடிக்கும் மக்களே ஆன்மா தீகருக்காத உள்ளிருந்து உணர்த்தும் எளியபாவனையே சிவரகஸ்யமாகும்.

**மாயா** என, ஒதுக்கி விடுகின்றனர். ஆகவே அம்மாயாவும்! அம்மாயா மனமும்! தம்முனைகள், மறை முகமாக செலுத்தி, அந்த ஸ்ரீமஹான்களை, சாஸ்திர வேத வேதாந்த **பாண்டித்ய வான்** ஞானிகளாகவே வைத்திருக்கிறது.

வைத்தியம்:- ஹே பிரபோ! சிவரகஸ்யம் என்பதன், உண்மையான பொருள் என்ன!

ஸ்ரீஸத்குரு:- குழந்தாய் தாஸி! சிவரகஸ்யம் என்று,


**சிவம் + ரகஸ்யம்** = சிவரகஸ்யமாகும்.

என, ஸ்ரீமஹான்கள் சொல்வது கேள்விப்படுகிறோம்.

வைத்தியம்:- ஹே தயாஸாகரா! மஹான்களா? அந்த ஸ்ரீமஹான்கள் யார்? தாங்கள் தானே மூலம். (ஆகும்?)

அறிந்திடும் மூலகாரணம் இம்மூலத்திற்கும் மூலம் உண்டா? இதற்கு ஓர் முடிவே இல்லையா?

(84)



ஸத்குரு:- அதென்ன திருவடி, அப்படிக் கேட்டு விட்டாய்? மூலத்திற்கு மூலம், இல்லாத அந்த ஒன்றுதானே?

சைத்தியம்:- அதுதான் செய்யப்படா! செயல் படுத்தா ஒன்றுதானே? அது எப்படி ஸ்ரீமஹான் கள் ஆகமுடியும்? ஸ்ரீமஹான்கள் ஆக்க முடியும்?

ஸத்குரு:- செயல்படா ஒன்று என்றால், அதை இல்லையென்றே, முடிவு கட்டிவிட்டாயா????

மன்னிக்கவும்

சைத்தியம்:- ஹே பிரபோ! இல்லையென்ற தன்மை யில், இல்லை என்பதும் இல்லையே! என்றால் அதன் பொருள் என்ன?

ஸத்குரு:- இது நல்ல கேள்விதான்! இதை உணர் இல்லை என்ற **அதுதான்** இல்லை என்ற, **வாக்குதான்** இல்லையே தவிர? சுட்டிக் காட்டவோ! சொல்லி விளக்கவோ! தொட்டு





உ

உணர்த்தவோ! அதற்கு **அயலாக**
எதுவும் இல்லாத் தன்மையிலே! சொல்பவர்
எவர்? அதைக் கேட்பவர் எவர்? அதுபொருள்
எதைப் பற்றி, எவரிடம் விளக்குவது? ஆகவே
**பகுப்பு அற்ற** தன்மையதுதான்
இல்லை என்ற பொருளும் இல்லை! இல்லை என்ற இடமும் இல்லை
இல்லை என்ற வாக்கும் இல்லை. ஆனால் **ஒன்றுண்டு**
அறிவு அதை சொல்பவரோ! விளக்குபவரோ! அதைக்
கேட்பவரோ! எவரும் அதற்கு, அயலாக இல்லாத்
தன்மையதுதான், ஒன்றுண்டு என்றும், ஆனால் அதற்கு அன்னியம் ஒன்றுமில்லை
**கேவல கைவல்யமாக** உண்டு என்று
சொன்னார்கள் ஸ்ரீ மஹான்கள்!
ரகஸ்யம் :- அந்த மஹான்தான் யார்?
[illegible] அந்த ஸ்ரீ மஹான் **நீ**யும்! **யானும்**தான்!



உ

வைத்தியம்:- இது நல்ல விளக்கம்தான். இதற்கு ஓர் முடிவே இல்லையா?

ஸத்குரு:- கேட்பவன் நீ! இல்லையானால் சொல்பவன் யாம்! எப்படி இருக்க முடியும்? யாம் இருந்தும், ஒரு பிரயோஜனமும் இல்லையே! அப்படியானால் யாம் இருந்தும் இல்லாதவன்தானே? அப்படித்தான், அதுவும் இருக்கிறது! அது உண்டு என்றால், அதை கேட்க நீயும் உண்டு! அதை விளக்க யாமும் உண்டு! அந்த ஞானிகளாக நாம் இருவரும் உண்டு. இப்போ புரிகிறதா?

வைத்தியம்:- உணர்ந்தோம் பிரபோ! இதுபோதும். ஆமாம் சுகதேவா! உங்களிடம் ஓர் சிறிய கேள்வி? இது எம் குழந்தைகளுக்காக இதைக் கேட்கிறேன்? திடஞானி வேறு! ஆத்மஞானி வேறு?



பெண்களுக்கு (87) நாம் பெண் என்ற உடல் உணர்ச்சியே பெரும் தடை ஆகும். அவர்கள் உறுதியான திட நம்பிக்கையே அவர்களின் ஜீவன் முக்தியாகும். அவர்கள் அளவற்ற பொறுமை வேண்டும்.

சுகர் :- உண்மைதான் பாமா! திட ஞானி வேறுதான்! ஆத்ம ஞானி வேறுதான்!

வைத்தியம் :- புரியவில்லையே! இருவரும் ஜீவன் முக்தர்கள்தானே?

சுகர் :- ஆமாம்! இவ்விருவருமே ஜீவன் முக்தர்கள்தான் ஆனால் ஓர் வித்தியாசம்! திட ஞானி, தம் சாதனையால் பேராகியவன்! ஆத்ம ஞானி, அச்சாதனையால், ஜீவன் முக்தி அடைபவன்!

வைத்தியம் :- அப்படியானால் ஸத்குரு & சிஷ்ய/ பாவனை என சொல்லுங்கள்?

சுகர் :- அதுதான் இல்லை! இத்திட ஞானி, குரு ஆக இருக்கமாட்டான்! இருக்க இயலாது!

அவன் சாதனையின் வைப்ரேஷன்/ பரமாத்ம ஒளி & பர ஒளி இரண்டும் இணைந்து, அதை நம்புகிறவர்களை, ஜீவன் முக்தன் என, ஆக்கிவிடும்.



திட ஞானிக்கு மட்டும் அவதூத நிலை பொருந்தும் (88)
மற்றும் ஜீவன் முக்தி நிலை பெறும் ஆத்மஞானிக்கு அவதூத நிலை பொருந்தாது அது தேவையும் இல்லை.
அவனுடைய நம்பிக்கையே அவனுடைய ஜீவன் முக்தி ஆகும்!

வைத்தியம் :– திட ஞானியின் சாதனை முடிவில் எப்படி அனுபவத்தில் அமையும்? எப்படி அமைய வேண்டும்?

சுகர் :– ஓர் திட ஞானியின், முதிர்ச்சியின் அனுபவம், அவதூத நிலையாகும் (பிறந்த குழந்தை ஓர் இரு வயதுவரையில், எப்படி பயமே அறியாத) பிரம்ம சொரூபமாக இருக்கிறதோ! அந்த நிலையாகும்)

இதன் உதாரணம் :– பரதன்! ஜடபரதன்! வாமதேவர்! ரிஷ்யசிருங்கர்! பெண்ஞானி கார்க்கி! அஷ்டாவக்ரர் உன்னையும் சொல்லலாம் இன்னமும் ஒரு சிலர்தான்! வழிகாட்டுபவர் இல்லை! ஆனால் ஜீவன் முக்தர்கள்! உன் வசமே நிறைய உண்டு! ஆனாலும் ஒரு சிலர் மட்டுமே, பக்குவப்படவில்லை. ஆனால் பக்குவப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பக்குவப்படாத காரணம் :– (1) தம் சாதனையின், காலத்தை கணக்கு (குற்றம் குறைகள்) பார்க்கின்றனர்.

(2) பிறருடைய சாதனையையும் தேவைகளையும், கணக்கு பார்க்கின்றனர்.

(3) நாமும் ஜீவன் முக்தி பெற முடியுமா என சந்தேக கணக்கு போடுகின்றனர்!



சந்தேகம் வரக் காரணம்? விஷய ஆசைகளை முழுமையாக சர்வார்ப்பணம் செய்யாத் தன்மையும், பிறர் குற்றம் குறை தேடுவதாலும், இது நம்த வயதானே என தன்னை உணராத் தன்மையும் குறைக்காத் தன்மையுமாகும்.

இ பேராசை

இதுவே இவர்கள், ஜீவன் முக்தியின் தடையாகும்.

முடியும் என்றும், பெற்றுவிட்டோம் என்றும்

முற்றுப்புள்ளி (புள்ஸ்டாப்)

வைக்க தயங்குகின்றனர். இவர்களுக்கு

தன் மேலேயே, நம்பிக்கை வரவில்லையே! பின்

உன் மேல், எப்படி நம்பிக்கை வரும்?

வேத வேதாந்த, உபநிஷதம் & ஆதிசங்கரர், மற்றும், அனுபவஞானிகள், சொல்லும் ஸத்திய வாசகம்:—


ஒருவனுக்கு ஸத்குரு கிடைக்கும் வரைதான்

அவன் பந்தத்தவன்!

ஒருவனுக்கு ஸத்குரு கிடைத்த மறுகணம்,

அவன் பந்த பாச பற்றின் பிணைப்பின், விலங்குகள்

பொடிப்பொடியாக நொடியில், அவன் ஜீவன் முக்தனே!





↑ உன்னை, உணரும் நிலையில், எவரெவர்க்கு எது, சாத்தியமோ, அது ஆவர்! இது ஸத்யம்!

என ஸ்ரீ சுகதேவர், தம் ஆசியுரையை முடித்தார்.

வைத்யம்:- ஹே பிரபோ, சுகதேவா! உம் இந்த அவதாரத்தில், ஓர் சூட்சும ரகஸ்யம் இருக்கிறதே அது பற்றி, ஓர் விளக்கம் கேட்கலாமா?

சுகர்:- அவசியம் கேள்! அதற்காகத்தானே, உன்னை தேடி வந்தோம்.

வையக்யம்:- எம்பெருமான், அவர் உபதேசம் கேட்டு விட்டு, நீர் பறந்து வரும் சமயம், எம்பெருமானின் திரிரூபம், உம்மை விரட்டி வந்ததாகவும், அது சமயம், நம் ஸ்ரீ மகா வியாசபிரான் ஆஸ்ரமத்தில், அதாவது குடிலில் நம் ஸ்ரீ அன்னை பின்மடியால், விழுந்து பிராணனை விட்டு, உம்மை அந்த அன்னையின், வயிற்றில் குடிபுகுந்ததாகவும், ஓர் கதை பேசப்படுகிறது. இங்கு எந்த கதையும் வேண்டாம். அதன் காரண கருத்துதானே எமக்கு வேண்டும்.



இங்கு நாங்கள், உலக நிலையில் கர்ப்பவாசம்,
16 ஆண்டுகள், இருந்ததாகவும், திரி மூர்த்திகளின்
அன்பின்! பணிவின்! வேண்டுகோளுக்கு இணங்கி,
வெளியேறியதாகவும், புராணக்கதை யாவருக்கும்,
என்றென்றும், பதினாறு வயதுடைய மார்க்
கண்டேயனை/ போல், அன்றும், இன்றும்,
என்றென்றும், ஒரே மாதிரியாய், பிறந்த மேனியராய்
அவதூத நிலையில்) இந்த வீதியும், சஞ்சாரம்
செய்கிறீர்கள். இது அனுபவ பிரமாணம், உண்மையாகவே.
இதில் எம் கேள்வி எல்லாம் :- பதினாறு ஆண்டுகள்,
நாங்கள் அனுபவித்தது கர்ப்ப வாசமா???
தவ கோலமா???
இரண்டாவதாக :- கருவறையில், இருந்தபடி, திரி மூர்த்தி
களிடமும், நாங்கள் கேட்ட வரம் என்ன?
மூன்றாவதாக :- நம் தந்தை) வேதவியாசர் அடையாத,
அந்த நிலையை, நாங்கள் அடைய, காரணமாக
இருந்தது எது? இம் மூன்று கேள்விகளுக்கும் மூலம்,
விடையளித்தால் போதும்?



(92)

சுகதேவரின்
ஸத்தியவாக்குப்
படி அவர் சொரூபம்
சுகா என்ற நாமம்
மட்டும் உண்டு. ஆனால்
எந்த ரூபமும் இல்லை. அன்
இங்கு ஓர் ரூபம் சொல்கி
றீர்களே என்றால். வாக்கிய
விளக்கமாக கொடுக்கப்பட்ட கற்பனை கிளி
ரூபமென அறிய வேண்டும். அப்போதுதான்
கதை சொல்ல முடியும்

கேள்வி:— (1) பதினாறு ஆண்டுகள், தாங்கள்
அனுபவித்தது, கர்ப்பவாசமா? தபஸ் கோலமா?

பதில்:— **தபஸ்** கோலமே! வெளியே
என்றால், ஏகாந்தம் என்றும். குகை வாசம் என்றும்.
புற்று மூடிய கடுந்தபஸ் என்றும். இன்னமும் பல வழிபாட
நாட்களில், தேடி அலைய வேண்டும் மேலே சொன்ன
இம் மூன்றும் **ஒரே** இடத்தில் எமக்கு கிடைத்தது.
காரணம் **சிவரகஸ்யம்** கேட்டதன்
பலன்/ ஒரே இடத்தில் எம்மை தேடி வந்தது!

கேள்வி:— (2) கருவறையில் இருந்தபடி, திரி
மூர்த்திகளிடம், தாங்கள் கேட்ட வரம் என்ன?

பதில்:— தாங்களுடைய **சிவரகஸ்ய**
ஸத்தியவாக்குப்படி, **நாமரூபம்** கடந்த
நிலை வேண்டும். ஆனால் பக்குவ ஆன்மாக்களுக்கு,
மட்டும் **சுகா** என்ற ஒலியுடன் அழைத்தால்,



# அறிவின் 93

பிரகாசத்திற்கு
ஓர் உதாரணம்:—
நவக்கிரக தோஷம்
என்ற நிலையில், சனி
ஸ்வரனோ, ராகுவோ,
கேதுவோ, நாமரூப குண தோஷ பேதத்
தால் இல்லவே இல்லை. தொடரும்.

அவர்களுக்கு, சுகம் கொடுக்கும் நிலையுடன்,
ஆனந்த நிறைவுடன் அவர்கள், உள்ளும்,
புறமும், யாம் நிறைய வேண்டும். இக்கலியுகத்
(இங்கு தோற்றத்தை சொல்லவில்லை)
தில் யாம், தோன்றியதால், கலிதோஷ நிவர்த்தி
யாக ஹரிஅறிவுடன்(யால்)
யாம், ஒன்ற வேண்டும். இவ்வரக்கால், ஸ்ரீமத்
பாகவதம், சொல்லும் நிலை, ஒத்துப்பட்டது.
நாம் இந்த, அவதாரத்தில், எவர் பெறுகிறாரோ,
அவர் நிட ஞானியாக திகழ வேண்டும். இதுவே
யாம், பெற்ற வரங்களாகும்.
கேள்வி:— ③ நம் தந்தையாகிய, ஸ்ரீவே
தவியாசர்! அடையாத, அதீத
நிலையை, நாங்கள் அடையக் காரணமாய்
அமைந்தது எது? அது எப்படி??



சனீஸ்வரனே! (94)
ராகுவோ!
கேதுவோ! இவர்கள்
நாம ரூப குண தோஷ
பேதங்களில் இல்லை.
கருணை நிலையால் ஸ்ரீமத
வாகத இருக்கிறார்கள்
பேரறிவான ஏக நிலையில் அதுவாக
அவர்களும்! அவர்களாகிய யாமும் அதுவாக
இருக்கிறோம்! ஆத்தா.

பதில்: — நம் ஸ்ரீ தந்தை யாகிய ஸ்ரீ வேதவியாசர்
அடைந்ததும்! அனுபவித்ததும்! பிறர்க்கு அனுபவம்
ஆக்கியதும்! 4. வேதம் ஆகும்! இது
இக்கலியுக மாந்தருக்கு, அத்யாவஸ்ய தேவையாகும்.
இது கர்மா / பக்தி / யோகம் /
இவற்றுடன் கூடி, ஞானம் சம்பந்தமாகும்.
ஆனால் யாம், ஸ்ரீ ஸத்குரு மூலமாக பெற்றதோ,
வேதாந்த ரகஸ்யமான, சிவரகஸ்யம்
அத்வைதம்
ஆகும். இது ஜீவன் முக்தியான், சொரூபமாகும்!

வேத சாஸ்திர சம்பிரதாயப்படி { செல்பவருக்கும்;
நாம ரூப குண பேதம் தோற்றமும் { சொல்பவருக்கும்;

வேதாந்த முடிவான, சிவரகஸ்யம், ஸ்ரீ ஸத்குரு மூலமாக
உணர்ந்தவர்களுக்கு, நாம ரூப குண பேதம் நசிக்கும்!



எந்நிலையிலும் (95)
எவ்வகையிலும்
நாமரூபம் என
வந்தால் அது
இத்தகையது என்ற
இருப்பிலும், இயக்கத்திலும்
பேதமும். அபேதத்தால்
ஞானதேவதையும். மனதின் கற்பனையாவும்.
தொடரும்.

ஸத்குரு:- தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்! என ஓர் மெய்யடியாரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்! அடிப்பொடி என, தம்மை அர்ப்பணம் செய்து கொண்டார்! ஆனால் நீயோ! தாஸிக்கும் தாஸியாய்! உன்னை ஆக்கிக் கொண்டாய்! ஓர் சிறிய கேள்வியை கேட்கிறோம். நீ ஓடிவிடாதே கரைந்து விடாதே! கலந்து விடாதே! என்ன சரியா?

வைத்தியம்:- ஹே பிரபோ! இது என்றென்றும், ஸ்ரீ பாகவதோத்தமர்களின் பாததாஸியே! இது ஸத்யம்! அதே நேரம்! தாங்கள் அமயகரத்தில், ஆகும் ஓர் பதுமையே! ஆட்டுவித்தால், ஆடாதார் யாரேனும் உண்டா! இல்லையே? அதே நேரம் தாங்களே அது (ராம்) அனுமதியால் தாங்கள் வழி காட்டியாயும்! கை காட்டியாயும்!



உ

தாங்களுடைய
சுழிக் குறியில் பரவெளியை ஒலிபரப்பும்
ஓர் ஸ்பீக்கர் ஆகவும்; அதே நேரம், எம்
மெய்யன்பர்கள் நிமித்தமாக, தாங்களுடைய
ஆழ்ந்த கருத்துக்களை, வரி வடிவில், வெளிப்
படுத்தும் நிலையில்; எழுதியவன் கூடன்
(கண்ணன்)கை பேனாவாகவும் ஆவோம்.
எமக்கு இருப்பே இல்லை ஆனால் அதன்
நிலையில் யாம் உண்டு. தாங்களும், அன்பர்களும்,
உண்டு என்றால், உங்கள் நிமித்தம், யாம் உண்டு.
தாங்களும், அன்பர்களும், இல்லை என்றால்,
நாம் அனைவரும், நாம ரூபத்துடன் இல்லை தான்.
நாம் அனைவரும், அதுவாக எந்த வித மயமும் உள்ளோம்.
யாமே அது! அதுவே யாம்! என அமைதியாகவே சுகமாகவே,
இருக்கிறோம். எம்பிரானே! உங்கள் கேள்வியை கேட்பவரும்,
அக்கேள்வியும் நீயே! அதன் கருத்தும் நீயே!
அக்கேள்வியின் பதிலும் நீயே! எல்லாம் நீயே!
எல்லாம் நீயே! எல்லாம் நீயே! இது சத்தியம்!



எந்நிலையாயும் (97)
எவ்வகையாயும்
நாம ரூபத்தை முழு
மையாக கெடுத்தால்
அது சம்பந்த இருப்பும்!
இயக்கமும்! அதைவ்
குணதோஷ பேதமும்
அவஸ்யம் உண்டாகாது. அதால் புண்ணிய
பாபமும்! ஜனன மரணமும் இல்லை!
தொடரும்.

அங்கு
ஸ்ரீ ஸத்குரு தேவரையும்! சுக தேவரையும் காணோம்!

ஹே பிரபோ! இது என்ன வேடிக்கை? ஏதோ ஓர்
கேள்வி கேட்கப் போகிறேன் என்றீர்கள்!
தாங்கள் எங்கே? தாங்கள் கேள்வி எங்கே??
**மாயா** தாங்கள், இருவரிடமும் இடையாதே?
இது என்ன மாயம்? மறுவினை,
ஸ்ரீ ஸத்குருவும் / ஸ்ரீ சுகப்பிரம்மமும் பிரசன்னமானார்கள்
ஸத்குரு :- ஹே தாஸியின் தாஸானுதாஸனே!
உன் **ஸத்திய** வாக்கினால், நாங்கள் இருவரும்
மயமாகிவிட்டோம்! சரி இனி, உன்னைப் பற்றிய
வாக்கு தேவையில்லை! அது பற்றி பேசவும் மாட்டோம்.
யாம் உன்னை தேடி நாடி வந்ததோ, ஓர் இறைய கேள்வி
நிறைக்கவே! அது உன் வாக்கில், எப்படி வருகிறது
என, சரிபார்க்கவே வந்தோம். உன்னைப் பற்றி
கேள்விப் பட்டது, அதையும் ஸத்தியமே! இக்
கேள்வி, மெய்யுடையது மட்டும் அல்ல! இச் சுகப்பிரம்
மம்! மற்றும் எல்லா, ஸ்ரீ மஹான்களும் சம்பந்தப்
பட்டதாகும்!



அந்த நாமரூபம் (98)
கெடவேண்டு
மானாலும் எல்லாம்
மண்ணுக்கு அன்னிய
மாயில்லை என உணர
வேண்டும். அம்மண்
பரத்திற்கு அன்னிய
மில்லையென உணர
வேண்டும். அப்பரத்திற்கு
நாம் அன்னியமில்லை என உணர வேண்டும்.
தொடரும்.

வைத்தியம் :- ஹே பிரபோ! ஹே மஹாத்மாக்களே!

தாங்கள் அன்றோ! இவ்வேழையின் பாக்கியம்! கேள்வியும் அதன் பதிலும் ஒன்றே

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! இங்கு ???????

இது! அது ஆகவே இருந்தது!

ஸ்ரீ ஸத்குரு :- ஹே தாஸ அடிகளே! ஓர் சமயம், (தாங்கள் செல்லாத இடமில்லை) யமபுரி! (இயம நியமங்களை, பழுதின்றி பராமரிக்கும் காலதேவனுடைய, வாஸஸ்தலம்) சென்றிருந்த சமயம், (அங்கு உமது தண்ணளியுடன், எம தர்மராஜனும், ஸ்ரீ பரமாத்மாவும், உடன் இருந்ததாக அறிகிறேன்) அங்கு ஓர் கேள்வி எழுந்தது? அதாவது ஸிவஞானானுபவ நூலின், 35வது பாடலில் வரும் ஓர் வரியை,

அந்த என்ற ஓர் வாசகத்தை இடைச் செருகலாக்கி தாங்கள் கூறும், உரைத்த பொருளாவது :-



இதன் அடிப்படை (99)
எல்லா நாமரூப
ஓம் மன்றாக இருந்தாலும்
அனைத்தும் ஸ்ரீ பகவான்
பொருளே! அனைத்தும்
ஸ்ரீ பகவான் செயலே!
இம்மெய்யும்! இயக்கமும்!
இவற்றின் தோற்றங்கள்
முடிவுறாத தன்மையால் தோற்றமும் அழிவும் ஞானமும்
உன்னை பற்றுதலும் உனக்கில்லை! முடிவுற்றது.

அந்த, ஹயனும் இல்லை! ஹரியும் இல்லை! ஹரனும் இல்லை! என்று உணர்வதாக அறிகிறோம்.
அது சமயம், திரிகர்த்தாக்களும் அங்கு தோன்றி, சற்று **சினம்** காட்டும் பாவனையால் அதன் விளக்கம் கேட்க! அங்கு ஓர் **ஞானியின்** வாக்காக, கருத்து, தெளிந்த, ஏற்புடைய! வாக்கும் கொடுத்திருக்கிறீர்கள். அதை அவர்களும் ஏற்கிறோம்!
ஆனால்
இதில் எம் கேள்வி என்னவென்றால்?
(1) ஹயன்! ஹரி! ஹரன்! இம்மூவரும், இல்லை என்ற கருத்தா?
(2) பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான் ஆகிய மூவரும் இல்லை என்ற கருத்தா?
(3) அம்மூவரையும்! இம்மூவரையும்! தாங்கள் எப்படி காண்கிறீர்! அவரை எப்படி உணர்கிறீர்?
இம்மூன்று கேள்விகளுக்கும், பதில் சொன்னால் போதும்?



(100)

சதாசிவம் &
மகேசன்! ஆகிய
இருவருக்குமே தோற்றம்,
இருப்பு, மறைவு, இல்லை.
வாக்கிய விளக்கமாகவும்
ஸ்வயம் ஜோதி வடிவிலும்
உண்டு. இருப்பினும்! இயக்
கத்திலும் இல்லாத்தன்மையால்
அவர்கள் இல்லை என்று சொல்லலாம். ஆனால்
பரசொரூபமாக இருக்கிறது.

அதுவாகவே, அதை பேசுகிறது:- (அதன் வாக்கு)

எல்லாம் ஒன்றே! அது சுத்த சிவமே!

அதுவே யாம்! யாமே அது! இது ஸத்யம்!

அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்!

ஜகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!

**பிரம்மம் ஸத்தியம்! ஜகத் மித்தை!**

**நாம ரூபமும்** அதன் **குணமும்** தான்

இல்லவே இல்லை! இல்லவே இல்லை! இல்லவே இல்லை!!!

அதுவே ஸத்தியம்! அதுவே எல்லாம்! அதுவே

**யாமும்! நீங்கள்** அனைவருமாகும்.


(1) அயன்! அரி! அரன்! ஆகிய இம் மூவரும்
இல்லை என்ற கருத்தா ???

பதில்:- சதாசிவம்! மகேஸ்வரன் (மகேசன்)
இவ் இருவரும், **சொல்** விளக்கமே!

நாம ரூப குணமாக இல்லை என்பதே உண்மை!

அவை காலாதீத பரசொரூபமாகவே இருக்கிறார்கள்.






ஹயன்! ஹரி! (101)
ஹரன்! ஆகிய
மூவரையும் முன்
கூறிய சதாசிவம்!
மஹேசன் இவர்க
ளுடன் ஐந்தாவு ஐம்
படிவாம். இதற்கு
விளக்க வரியோ, வாக்கோ
மேலும் இவர்களை
இல்லை இவர்கள் உணர்வு பூர்வமானவர்கள்.

ஹயன்! ஹரி! ஹரன்! ஆகிய இம்மூவரும்!
வாக்கிய விளக்கமாக, இருந்தாலும்;
எந்த வடிவமும் (ரூபமும்) இல்லாதவர்
கள் என்பது, ஸத்தியமே! ஆகவே இவர்கள்
ஒலி (சப்தம்) ஒளி (ஸ்வயம் ஜோதி)
அம்சம் பொருந்தியவர்களே! ஆகவே இவர்களி
நாமரூபமாக இல்லையென்றது உண்மையே.

ஒலிக்கும்! ஒளிக்கும்! வாக்கு
வரிவாக்கமே தவிர ரூபம் இல்லை.

(2) பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்!
ஆகிய மூவரும் இல்லை என்ற கருத்தா?

பதில்:— மேலே கூறிய, மூவரின் அம்சம் தான்!
கீழே கூறிய மூவரிடமும், அனுமபிரமாணம்,
பொருந்திய தன்மையால், இம் மூவராகிய
பிரம்மனும்! நாராயணனும்! சிவபெருமானும்!
ஸ்வயம் ஜோதியின் நிலையால் சூட்சுமமான



**நாமரூபம்** தாங்கியவர்களாகும்.

அம் மூவரும், தொழில் கர்த்தாவாக இல்லை! ஆனால்

இம் மூவரும், தொழில் கர்த்தாவாக **பதவி**

ஏற்பதால், இம் மூவரும் உண்டு எனலாம்!

(3) அம் மூவரையும்! இம் மூவரையும்! தாங்கள் எப்படி காண்கிறீர்கள்? அல்லது எப்படி உணர்கிறீர்கள்?

பதில் :— அம் மூவரும் :— **தோற்றம்! இருப்பு! மறைவு!** இல்லாதவர்கள்!

ஆகவே இவர்களை, யாம் காணவில்லை. காணவும் முடியாது.

ஆனால், இவர்களை, பரசொரூபமாகவே **அது** ஆகவே உணர்கிறேன். இது சத்தியம்!

மேலே சொல்லிய, இம் மூவரும் :— **இருப்பு**

மட்டும் உண்டே தவிர, தோற்றம்! மறைவு! இல்லாதவர்கள்.

ஆனால் இம் மூவரையும், காணலாம்! இம் மூவரும் இருப்பு என இருப்பதால் காணமுடியும்!





உ

மனக் கண்கள் கொண்டல்ல! அறிவு
கண்! கொண்டு காணமுடியாது! உணரலாம்!
மேலே சொல்லிய அம் மூவரும்; பேரறிவாக
உணரும் நிலையில் பரசொரூபமே!
கீழே சொல்லிய, இம் மூவரும், அறிவு
நிலையில், உணரும் போது, பர அம்சம் கொண்ட, அறிவால்
பரபகவானைக (தெய்வங்களாக)
உணர்கிறோம்! அனுபவிக்கிறோம்! கொண்டாடுகிறோம்!
கொஞ்சி குலாவுகிறோம்! அவ் விளையாட்டினால்,
பேரானந்தம் அடைகிறோம் இதுவே உண்மை!
ஆனால் ஓர் உண்மை, எப்படி என்றால்?
அன்று ஐயம்; நியம | சமயமில்
கேள்வி வேறு! காட்சி வேறாக! இருந்தது!



(104)

லோகமாயா
சம்பந்த ஈஸ்
வராதிகள்
யோகமாயா சம்பந்த
ஞானியின் முன்
வெயிலின் முன் பனி
போல மறைய
வேண்டியதே நியதி! இதுவே அன்று நடந்
தது.

அன்று யாம், அறிவாக இருந்திருந்தால்,
அங்கு **ஏகுணம்** ஒன்று இருப்பதால்,
**கருணை** யின் நிலையால், சற்று தயங்கி இருந்து,
சற்று கருமாற்றம் போல், ஏதோ ஒன்று ஆகியிருக்கலாம்.


அன்று யாம், பேரறிவாக இருந்த தன்மையால்,
**நிர்குண** சொரூபமாக! **அது** ஆகவே,
இருந்ததால்; அந்த ஸத்திய வாக்கு வந்தது!
இங்கு ஓர் கேள்வி எழலாம்!
அது செயலற்றதாயிற்றே! அங்கு இருந்து,
எப்படி செயல்பட முடியும்? என கேட்கலாம்?
அங்கு செயலற்ற யாம் **எம்** செயலுக்காக
**யோகமாயாவை** சேர்த்துக் கொண்டோம்.
அங்கு ஈஸ்வராதிகள் **லோகமாயா** சம்பந்தத்தோடு
பேரறிவையும் அசைக்க முடியுமா?



ஹயன் என்றால் (105)
பிரம்மமாகிய
அந்த ஒன்றே
இருக்கிறது எனப்பொருள்.
ஹரி என்றால் அந்த
ஒன்றாகிய பிரம்மத்தை
அறியும் அறிவே என
பொருள்படும். ஹரன்
என்றால் அந்த அறிவு
ஸ்திரம் ஆவதற்கு
சத்தியம் பேசி தர்மத்தை நிலைநாட்டும்
அறமாகிய தர்மம் எனப்பொருள்படும்.

என்று, பலம் பரீட்சையில் தான்.

பிரம்மன், நாராயணன், சிவபெருமான்,
ஆகிய மூவரும் வந்தனர். ஆனால் அவர்கள்
தம்மை **ஹயன், ஹரி, ஹரன்,**
என அறிமுகப்படுத்திக்கொண்டு ஓர் அதிகார
வார்த்தையும், பயன்படுத்திய வண்ணம்;
ஹயன், ஹரி, ஹரன், இல்லை என்றால்?
**உனக்கு** இருப்பு உண்டா? இயக்கம்
உண்டா? நீ என்ன ஆவாய் தெரியுமா?
என ஓர் **மிரட்டல்** வந்தது.
அது ஒலி அலையின் வேகமேயன்றி வேறென்றுமில்லை.
பனங்காட்டு நரி, சலசலப்புக்கு அஞ்சாது.




என்ற பழமொழியின்படி, அக்காட்சி அப்படி அமைந்தது! எப்படி என்றால்?

"**சமுத்திரத்தை** பார்த்து, அதில் தோன்றிய **உப்புப்பதுமை** கொக்கரித்து, ஆர்ப்பாட்டம் செய்தது போல், அக்காட்சி இருந்தது!

அங்கு வந்த வார்த்தைகளில், எம்மில் தோன்றிய நீங்கள் வேறு! யாம் வேறு? உப்புப்பதுமைகளே! என்ற சத்திய வாசகத்தில்,

**நாமரூபம்** அனைத்தும், கரைந்து கலந்து, மெய்மாயின! அந்த ஒன்றே இன்றும், அன்றும், என்றென்றும், அது அதுவாகவே இருக்கிறது.

**போக்குவரவில்** மயங்காமல் இருந்தால் போதும் என, அதுவாகிய அவனே! அவனாகிய அதுவோ! ஆணை நினைவு கொண்டது!



சுகர் :- ஹே சுகமான பாபாவே! இந்த திறமை
உனக்கு எப்படி வந்தது?

வைத்தியம் :- ஹே சுகமான சுகசொரூபமே! இது
என்ன கேள்வி? **நமக்கு** அயலாக எதுவும்
இல்லாத நிலையில், திறமை என்ற வார்த்தையே
தேவை இல்லையே! யார், யாருடன், வாதாடுவது?
அங்கு வெற்றி தோல்வி ஏது?


சுகர் :- திறமை என பேசப்படுகிறதே! அதன்
காரண காரியம் என்ன?

வைத்தியம் :- **அறிவும் மனமும்!**

கலந்துரையாடும் போது, திறமை வெளிப்படும்.
அங்கு, வெற்றி தோல்வியும் உண்டு!

சுகர் :- இப்போது நீங்கள் இருவரும் உரையாடும் போது, மனமாக உரையாடுகிறாயா? அல்லது அறிவாக உரையாடுகிறாயா?

வைத்தியம் :- இதென்ன கேள்வி பாபாவோ? ஹே சுக் குருநாதா! அது கேள்வி தான் நீங்கள் இருவரும் அறியாததா? இக்கேள்வி தேவையா?



அறிவின் உரையாடல் (108)

லௌகீகதர்மத்தை சாடி, தெய்வீக தர்மத்தோடு இணைத்து தெய்வீகதர்மத்தை பரசொரூபத்துக்கு வழிகாட்டுவதாக அமைவது

பெரும்பாலும் இது லௌகீகம் & தெய்வீகம்! ஆகிய இந்த இரண்டும் இணைந்தும், லௌகீகத்தை முழுமையாக ஒழித்த நிலையாகும்.

ஸத்குரு :- ஹே நாஸி அழகனே! இது பரீக்ஷை அல்ல! உன் தொனியை உணர்கிறேன். நம் இந்த கேள்வி பதில் உரையாடல், மூன்று லோக ஸ்தானிலும் கைலாயம், வைகுண்டம், பிரம்ம லோகம், அனைவரும் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர். ஆகவே இது முக்கியமே! எல்லோருக்கும், மிக மிக முக்கியமானதாகும்.

வைத்தியம் :- ஹே பிரபோ! இப்படி உரையாடல், மனமும் அறிவும்! எனச் சொல் வகை குரு = அறிவாக வும்! சிஷ்யன் = மனமாகவும் பிரிக்கப்படும். அறிவின் நிலையில் இவ்வேளை உரையாடும் நிலையில், ஜீவகவானாகவும்! சிவசமயம் பேரறிவின் நிலையில் ஸத்குருவாகவும்! (இங்கு பரசொரூப ஸ்திதி உண்டு. இங்கு பரசொரூபத்தை செயல்படாத்தன்மையில் இங்கு மட்டும், யோகமாயாவின் சாமர்த்தியங்களில்) செயல்படமுடியும்! இதில் ஓர் உண்மையின் ரகசியம் என்னவென்றால்? (இது பெரு ரகசியமானது)



இவேதறிவின் உரையாடல்: 109


தெய்வீக மாயாவையும் முழுமையாக தள்ளி; அதன் ஜீவகவாஹி மாயா அற்ற நிலையால் பரமாத்மாவாக்கி! ஆத்மாவாகிய தன்மை அத்துடன் இணைத்தும். பரசொரூப ஸ்திதியையே முழுமையாக வல்ல யுக்தி சக்தி நாமரூப குணம் நசிக்கவும்.

(இது திடஞானி ஒருவனுக்கே சாத்தியமாகும். ஏனையோருக்கு, சாத்தியமாகாதென, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.)

இது வரை 27 சதுர் யுகம் முடிந்திருக்கிறது.

இச் சதுர்யுக காலங்களில் பர கருணையால் தோன்றிய ஸத்குரு நாதர்களின்! அமுத வாக்கு, இந்த வினாடியும்! ஆகாயம் முழுவதும் பரவி இருக்கிறது. அது யோகமாயாவின் சாமர்த்தியமாகும்! அதை திடஞானி ஒருவனே! எந்த வினாடியும் கிரஹிக்க முடியும். அப்படிதாம் கிரஹித்ததை, நிலைகண்டு! இடம் கண்டு! பொருள் கொண்டு! ஆங்காங்கு, வெளிப்படுத்த முடியும்!

அதே நிலையால்தான், இந்த ஏழை பரதேசி. வைத்தியமும், உங்கள் இருவரிடமும், மற்றும் அனேக இடங்களிலும், அறிவு ஆகவும்! பேறிவு ஆகவும்! நிலை இடம் பொருள் கண்டு, உரையாடுகிறேன்.



ஸத்குரு:- மனதை! சிஷ்யன் எனச் சொன்னீரே! அதன் பொருள் என்ன?


வைத்தியம்:- மனம் என்றுமே; எண்ணம்! எண்ணம் என்றால் முக்குண வாஸனையால் வருவது!

இம் முக்குண வாஸனையானது, ரஜஸ், தமஸ்!


இவ்விரண்டுமே, விகார! விவகார/சம் பந்தம் கொண்டது.

இதை, ஜீவநிலை என்றும் ஸத்வத்தை! தெய்வ நிலை என்றும் கூறுவாம்.

இந்த ராஜசம்! தமசம்! இரண்டும் போது, பெரும்பாலும், சபலம்! சலனம்! சந்தேகம்! (குற்ற உணர்வான சின்ன சின்ன ஆசை! அவ்வாசையின் வேகம்! அவ் வேகத்தின் விளைவு! என மூன்று நிலைகளிலும்) வெளிப்படும் போது, கலிகோரம் கோர குணங்கள், தலைவிரித்தாடும். இங்கு ஸத்குருவின், ஸ்வய அனுபவ பாடம், நடை பெறும் போது அக்கோர குணங்கள், அச் சிஷ்யனிடம் இருந்தாலும். இவர் அனுபவத்தால், படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக! பொடிப்பொடியாகி! பொடிப்பொடியாகி! பொடிப்பொடியாகி!




நசித்து மறைந்து வரும் என்பதனை உணர்ந்த
ஸ்ரீமான்கள், சொல்லக் கேள் விரும்புகிறோம்.
ஸத்குரு சுகதேவர்! இருந்த நிலையில்,
அன்பின் உருவானவரானவே! அனைவர்க்கும்
உங்கள் ஆசியின், அமுத உரை என்ன?
வைத்தியம்:— **பர கருணை**
என்ற நிலையில்; உங்கள் இருவருடைய ஆசி
அதாவது
உரையாவது:— **ஸத்குரு சுகதேவர்!**
அமுதவாக்காவது:—
இக்கலியுக புருஷனின்! தர்மார்த்த, தோஷ
**குணமானது!** போட்டி & பொறாமை!
சூழ்ந்த நிலையில்! வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரம்!
என்ற நிலையில், பணம்! பட்டம்! பதவி! என்ற
நிலையில், விரோதம்! குரோதம்! வஞ்சகம்!
சூழ்ச்சி! லோபம்! இன, மத, துவேஷம்! எங்கும்
எதிலும், குற்றம் குறை கண்டு கண்டு, பேர் வாங்குதல்!
ஆசையினால் **விருப்பமும்** துவேஷிக்கிறன்,



**வெறுப்பும்** / வேத வேதாந்த சாஸ்திர **படிப்பறிவினை** அனுபவம் இல்லாத, வித்வத்வம் என்ற பாண்டித்யமும், இவைகளுடன் கௌரவமாய் வாழ வேண்டுமென்ற உந்துவால், பிறரை கெடுத்து **நான்** வாழ்வேன் என்ற அஹமமதையுடன், நான், என்னுடைய, எனது, செழித்தோங்கிய நிலையால், பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி, பேசிப் பேசி, பழகிப் பழகி,

**பாழாய்ப் போன**

**காலங்கள் / போதாதா?**



113

இங்கு,

ஸத்வ குணசம்பன்னராய்! பொறுமை!
அன்பு! கருணை! அமைதி! சாந்தி! குற்றம்
குறைகளை பாராட்டாமல்! மறத்தல்! மன்னித்தல்!
பிறருக்கு விட்டுக் கொடுத்தல்! நிலை கண்டு
விலகிக் கொள்ளுதல்! திட்டமிட்ட காரியங்களை
திட்டமிட்டபடி ஒழுங்காக நடைபெறுகிறவன்று
நாம் அடங்கி! பிறரை அடக்காமல்
பணணணணணிலே பாதையாக கொண்டு
வார்த்தைகளை குறைத்துப் பேசி! பேசிப் பழகி!
பேசிப் பழகி! பேசிப் பழகி! பேசிப் பழகி!
பேசிப் பழகி! பேசிப் பழகி! பேசிப் பழகி!
பேசிப் பழகி! பேசிப் பழகி! பேசிப் பழகி!
பேசிப் பழகி! பேசிப் பழகி! பேசிப் பழகி!
பேசிப் பழகி! பேசிப் பழகி! பேசிப் பழகி!
பாஸாய் ஆகலாமே?
உங்களால் முடியுமே! உங்களால் முடியாததை,
இந்த பைத்தியம் புலம்பாது



உ

உள்ளம் உங்கள், சர்வார்ப்பணத்தால்,

பாவாக ஆன நிலையில் நிர்குண

நிலையில், உங்கள் ஸ்ரீ ஸத்குருவின், ஸத்திய வாசகமான:— எல்லாம் ஒன்றே! அது சிவமே! அதுயாமே! யாமே அது! என்ற அனுபவ நிலையில், அதாவது பிரம்மார்ப்பண நிலையில்!

வாக்கை மனதில் ஒடுக்கி! மனதை அறிவில் லயமாக்கி! அறிவே பேரறிவாக ஆன நிலையில்.

சும்மாவே சுகமாய்! சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்!
சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்!
சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்!
சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்!
சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்!
சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்! சும்மா சுகமாய்!

பரப்பிரம்மானந்தமாய்

சும்மாவே, சுகமாக! இருப்பாயாக!



115

நாம,ரூப,ஜக,ஜீவ தோற்றங்கள்
(பொன்! பொருள்! உறவு! சுற்றம்! நட்பு!)
எல்லாமே குண தோஷ பழக்க (பேச்சு)
வழக்க (செய்கை) பேசிப்பேசி! பேசிப்பேசியே!
உண்டு என நம்பப்படுகிறது.
மேலே கூறிய வற்றின், தாக்கம்! ஸ்ரீ பகவானை என
சர்வார்ப்பணமாக விட்டு விட்டால்! அப்பழக்க
வழக்க, தோஷ குணம், சர்வநாசமாகும்.
இதன் சாதனை?
பேச்சை குறை! விட்டுக்கொடு!
எதையும் எந்த வினையும்
சகித்துக்கொள்! பொறுமையாய் இரு!
இந்நிலையில், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!
என்ற, ஸ்வய அனுபவ நிலையில், நாமும் அது! அதுவே நாம்!
என சொல் அற, சும்மாவே! அகமாக இரு!
எல்லாம் நீயே! எல்லாம் நலமே!
எல்லாம் நீயே! எல்லாம் நலமே! கு
எல்லாம் நீயே! எல்லாம் நலமே!

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!